# சுதந்திரன்
SUTANTIRAN

தொலைபேசி: 23411 விலை சதம் 25

வள்ளுவர் ஆண்டு 2004, ஆனி 24உ (8—7—73) ஞாயிறு ஐ:ஆசிர் 7—புத்தகம் 26 ஏடு 30


பொருளாதாரத் துறையிலும்

## தமிழ் ஈழம் தாழ்கிறது! சிங்களம் வாழ்கிறது!

### நாவலரின் எழுச்சி முரசம்!

"தமிழ் தேசிய இனம் வாழ்வா அல்லது சாவா என்று முடிவு காண வேண்டிய இறுதிப்போராட்டத்தில் இறங்க வேண்டிய காலம் வந்து விட்டது. எமது சட்ட பூர்வமான அரசியல் உரிமைகள் எமக்கு மறுக்கப்படுவதுமட்டுமல்ல — இந்நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தின் முதுகெலும்பாக விளங்கும் தமிழர்களுக்கு தொழில் துவங்கும் அடிப்படை உரிமைகூட மறுக்கப்படுகிறது. ஒரு தமிழன் தொழில் ஒன்றைத் தொடங்க விரும்பினால், அவன் அத்தொழிலை நடத்துவதற்கு வேண்டிய



அடிப்படை த[illegible]யான மூலப்பொருள்களைத் தருவிப்பதற்கு 'கோட்டா' வழங்க மறுக்கப்படுகிறது. இந்நிலையில் தமிழன் இந்நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்காக எவ்விதம் பாடுபடமுடியும்?"

—இவ்வாறு தமிழர் கூட்டணி செயலாளர்நாயகம் நாவலர் அமிர்தலிங்கம் அவர்கள் சுருவில் இளைஞர் முன்னணியின் கூட்டமொன்றில் பேசும்போது கேட்டார். திரு. கே. திருவருள்

(7-ம் பக்கம் பார்க்க)

# சிங்களவர்களும் விரட்டப்படுவரா?

## அத்துமீறல் குடியேற்றத்தில் அரசு எப்படிச் செயல்படும்?

### நிலைமை கூர்ந்து கவனிக்கப்படுகிறது!

அவசரகாலச் சட்டவிதிகளை பிரகடனப்படுத்தி கிழக்கு மாகாணத்திலுள்ள அரசாங்கக் காணிகளில் அத்துமீறிக் குடியேறுவதற்கு தடைவிதித்துள்ள அரசாங்கம், ஏற்கெனவே அங்கு குடியேறியிருக்கும் சிங்களவர்களையும் அங்கிருந்து உடனடியாக வெளியேற்றுமா? அல்லது கண்சாடையாக சிங்களவர்களை விட்டுவிட்டு, குடியேறியுள்ள மலையகத் தமிழர்களை மட்டுமே துன்புறுத்தி விரட்டியடிக்கப்போகிறதா? இது விஷயத்திலும் இனப்பாரபட்சக் கொள்கையையே அரசுபின்பற்றப்போகிறதா? அல்லது பாரபட்சமற்ற நிலையில் அரசு செயல்படப் போகிறதா?

-இந்தக்கேள்விகளே தமிழ் மக்களின் உள்ளங்களில் இன்று கேட்கப்படும் ஒரே கேள்வியாகும். அரசாங்கம் அத்துமீறல் குடியேற்றப் பிரச்சினையில் எவ்விதம் நடந்துகொள்ளப்போகிறது என்பதை தமிழர் கூட்டணி இப்போது கூர்ந்து கவனித்து வருவதாக கூட்டணியின் தலைவர் ஒருவர் சுதந்திரன் நிருபரிடம் தெரிவித்தார்.

தமிழர்களின்பாரம்பரியப் பிரதேசமான கிழக்கு மாகாணத்தில் கடந்த பல ஆண்டுகளாக அரசாங்கக்காணிகளில் அத்துமீறல் குடியேற்றம் நடைபெற்றுவருவதும் - இந்த அத்துமீறல் குடியேற்றத்தில் சிங்களவர்களே பெரும்பான்மையாக ஈடுபட்டிருந்தார்களென்பதும் - தமிழர்களை அவர்களது சொந்தப்பிரதேசத்திலும் சிறுபான்மையினராக்கும்

(4-ம் பக்கம் பார்க்க)

### 'மே 22' சிங்களவர்களின் சுதந்திர நாள்!

காணி அமைச்சரே பகிரங்கமாக கூறுகிறார்!

'போர்த்துக்கியர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோரினால் சுரண்டப்பட்டு வந்த எமது சிங்கள மக்கள் குடியரசு நாளான 1972ம் ஆண்டு மே மாதம் 22ந் திகதியின் பின்னரே உண்மையான சுதந்திர ஆட்சியைப் பெற்றிருக்கிறார்கள்''

(7-ம் பக்கம் பார்க்க)

### அடிவாங்கிய அரசியல்வாதி!

ரௌடித்தனத்தையும், காடைத்தனத்தையுமே தனது அரசியல் மூலதனமாகக்கொண்ட கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஒரு கற்றுக்குட்டி அரசியல்வாதி அண்மையில் 'வளமாக' வாங்கிக் கட்டிக் கொண்டாராம்!

'மட்டக்களப்பு முட்டாள்' என தனது எதிரிகளால் அழைக்கப்படும் இந்தக் கோடரிக்காம்பு, ஆழம் தெரியாமல் 'கையை' வைத்து அவமானப்பட்ட சம்பவம் பற்றியே கிழக்கிலங்கை முழுவதும் இப்போது பரபரப்புடன் பேசப் படுகிறதாம்!

மானம் ஒன்றே பெரிதெனக்கொண்டு மாற்றுக்கு மண்டியிட மறுத்து வாழும் தமிழக் கவிஞன் ஒருவரின் இளவலுடன் காடைத்தனம் செய்யப்போய் 'பளீர் பளீர்' என்று 'ஜெய' மாக வாங்கிக் கட்டிக் கொண்டாராம்.

இவ்விஷயம் இப்போது பொலீஸ் வரை போயிருக்கிறதாம்!

அண்ணனை உள்ளே தள்ளியிருப்பதுபோல தம்பியையும் உள்ளே தள்ளிவிட்டுத்தான் மறுவேலை பார்க்கப் போவதாக அடிவாங்கிய இந்த அரசியல்வாதி இப்போது கறுவிக்கொண்டு திரிகிறாராம்!

### "அவர்களின் நோக்கம் தனி நாடு!"

தற்போது அவசரகாலச் சட்டவிதிகளின் கீழ் சிறைச்சாலைகளில் சுமார் 40 தமிழ் இளைஞர்கள் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள் அல்லவா?

இந்த இளைஞர்களின் அரசியல் நோக்கம் தமிழ் மக்களுக்கென இலங்கையில் 'தனி நாடு' ஒன்றை உருவாக்குவதுதாகும்!

இந்த 'மகத்தான' உண்மையை கண்டு பிடித்து அண்மையில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் ஒருவர் வெளியிட்டிருக்கிறார்!

அவர்தான் பாதுகாப்பு துணை அமைச்சர் திருவாளர் லக்ஸ்மன் ஜெயக்கொடி அவர்கள்.

# பொலிசார் திட்டம் தவிடுபொடி! ஆரியதாசாவுக்குக் கறுப்புக்கொடி!

## ஆறு இளைஞர்கள் கைதாகி விடுதலை!

கடந்த வாரம் யாழ்ப்பாணத்துக்கு சென்றிருந்த சுகாதார அமைச்சர் ஆரியதாசாவுக்கு கறுப்புக்கொடி காட்டாமல் தடுப்பதற்கு பொலிசார் எடுத்த நடவடிக்கைகள் தூள்தூளாக்கப் பட்டன—அமைச்சருக்கு தமிழர் கூட்டணியினர் திட்டமிட்டபடி கறுப்புக்கொடி காட்டி எதிர்ப்புக் கோஷங்களை முழக்கினர்.

கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் சம்பந்தமாக தமிழ் இளைஞர் பேரவை அமைப்பாளர் திரு. புஷ்பராசா உட்பட ஆறு இளைஞர்கள் கைது செய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

அமைச்சர்களுக்குஎதிராக கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடத்துவதை தமிழர் கூட்டணி கைவிட்டு விட்டதென்றும் இதற்கு காரணம் தொண்டர்கள் யாவரும் முன்வராததுதான் என்றும், அதனால் யாழ்ப்பாணத்துக்கு செல்லும் சுகாதார அமைச்சருக்கு கறுப்புக்கொடி காட்டப்பட மாட்டாதென்றும் குல்மால் ஏடான 'தினபதி' பிரசாரம் செய்து வந்தது.

அதே வேளையில் பொலீசாரும் சுகாதார அமைச்சருக்கு தமிழர்கூட்டணியினர் கறுப்புக்கொடி காட்டிவிடாமல் தடுப்பதற்கு படாத பாடுபட்டார்கள் — ஈற்றில் அவர்களும் ஏமாற்றமடைய தமிழர் கூட்டணியினர் அமைச்சருக்கு கறுப்புக் கொடி காட்டினர்.

கைதடி ஆயுர்வேத ஆஸ்பத்திரியை திறந்து வைக்க அமைச்சர் உள்ளே நுழைந்த போதும், ஆஸ்பத்திரியை திறந்து வைத்துவிட்டு அவர் வெளியே வந்தபோதும் கறுப்புக்கொடியும், எதிர்ப்பு கோஷங்களும் எழுந்தன.

கறுப்புக்கொடிகள் அமைச்சரின் கண்ணில் பட்டுவிடக்

(7-ம் பக்கம் பார்க்க)

### தமிழர் கூட்டணி கோரிக்கைகளுக்கு அ. லி. சே. சங்கமும் ஆதரவு!

அரசியல் சட்டத்தில் சிங்களத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதே இடம் தமிழுக்கும் அளிக்கப்படவேண்டுமென்றும்—பௌத்தத்துக்கு அளிக்கப்பட்டுள்ள அதே இடம் ஏனைய சிறுபான்மை மதங்களுக்கும் தரப்பட வேண்டுமென்றும் — இலங்கையை தாயகமாகக்கொண்டு இங்கு வாழவிரும்பும் சகலருக்கும் பூரணகுடியுரிமை

(7-ம் பக்கம் பார்க்க)

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழியக்கப்பிரசாரம் மேலும் துரிதமடைய வேண்டும்!

## தமிழன் தமிழைப் பயன்படுத்தாவிடில் தமிழை வாழவைக்க வேறெவருண்டு?

இன்றைய நிலையில் தமிழ் மொழியின் சிதைவு நாளுக்கு நாள் கூடிக்கொண்டே போகின்றது. ஆனால் இது நம் கண்ணுக்குப் புலப்படுவதில்லை. ஆங்கில மொழியைத் தமிழுடன் கலந்து ஆங்கிலத் தமிழ் நடையில் பேசாத எந்த ஒரு தமிழனையும் காணமுடியாது. இந்நிலை நீடித்தால், காலப் போக்கில் இவற்றுடன் சிங்கள மொழியும் சேர்ந்து கொள்ளும். எனவே பின்னர் ஆங்கில சிங்கள கலப்பு மொழியாக தமிழ் உருவாகிவிடும். இன்றைய நிலையில் இம் மாற்றம் பெரிதாகக் கருதப்படவில்லை.

இன்று எத்தனையோ சிங்களச் சொற்கள் தமிழ்மொழியில் புகுத்தப்பட்டு விட்டன. பொதுமக்களும் அதனை அப்படியே உபயோகிக்கிறார்கள் ச. தோ. ச, லங்காசம, லக்சல, சலுபில, சியவச, பொருவநார, மகாஜன சம்பத, ஜாதிக பொல, சலுசல, ஸ்ரீலங்கா போன்ற சில சொற்களை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

இதனை விட அரசமொழி அலுவல்கள் திணைக்களத்தில் கடமையாற்றும் மொழிபெயர்ப்பாளர்கள் சோம்பலினாலோ என்னவோ சிங்களச் சொற்களை அப்படியே தமிழிலும் உபயோகிக்கிறார்கள். அரசாங்க பாடப் புத்தகங்களிலும் இவர்களின் மொழிபெயர்ப்பே இடம் பெறுகிறது. இதனால் இளமைக் காலத்திலிருந்தே இச் சொற்கள் மாணவர்கட்குப் புகட்டப்படுகின்றன. இதனால் நல்ல பல தமிழ் சொற்கள் காலப்போக்கில் உபயோகத்திலிருந்து மறைந்துவிடுகின்றன.

உலகின் வேகமான போக்கில், எந்த ஒரு மொழியினதும் கற்புநிலை பற்றிப்பேச முடியாது. என்றாலும் எதற்கும் ஓர் அளவு உண்டு அல்லவா?

## வாழ்வின் துறையனைத்தும் தமிழுக்கு இடமளித்து வண்டமிழைக் காத்திட உறுதியெடுப்போம்!

### கச்சேரிகளில் தமிழுக்கிடமில்லை

வடகீழ் மாகாணங்களில் உள்ள யாழ்ப்பாணம் வவுனியா, மன்னார், திருமலை மட்டக்களப்பு கச்சேரிகளில் இன்று கூட சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மட்டுமே மாநாடுகளும், கூட்டங்களும் நடக்கின்றன. மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டம், மாவட்ட விவசாய அபிவிருத்திக் கூட்டம், மாவட்ட மீன்பிடிக்கூட்டம், பிரதேச அபிவிருத்தி பற்றிய கூட்டங்கள் எல்லாம் ஆங்கிலத்திலேயே நடக்கின்றன. இவற்றில் சிலவற்றில் மேலதிகாரிகள் மட்டுமே பங்குபற்றுகின்றனர். சிலவற்றில் சாதாரண மீன்பிடித்தொழிலாளர்களும், சாதாரண ஏழை விவசாயிகளும் கலந்துகொள்ளுகின்றனர்.

பொதுமக்கள் கலந்துகொள்ளும் கூட்டங்களிற் கூட ஆங்கிலமே அரசோச்சுகிறது. வந்திருக்கும் பொது மக்களுக்கு எதுவுமே விளங்குவதில்லை. தமிழ்ப் பகுதிகளில் உள்ள கச்சேரிகளிலேயே தமிழுக்கு மதிப்பில்லை இதைப் பற்றி யார் தட்டிக் கேட்டார்கள்? ஒருவருமில்லை. எனவே பொது மக்கள் கலந்துகொள்ளும் கச்சேரிக் கூட்டங்கள் தமிழிலேலே நடாத்தப்படவேண்டும் என கூட்டத்துக்கு வரும் தமிழ்ப் பொதுமக்கள் வலியுறுத்த வேண்டும். அப்படித் தமிழில் நடாத்தப்படாத கூட்டங்களைப் பகிஷ்கரிக்க வேண்டும்.

### பொன்னாள் எது?

வடகீழ் மாகாணங்களில் பல காரியாதிகாரி பிரிவுகள் இருக்கின்றன. இவற்றுடன் இன்று கூட தமிழ் பேசும் பெருமக்கள் ஆங்கிலத்திலேயே தொடர்புகொள்ளுகின்றனர். காரியாதிகாரியிடம் சீமெந்துக்கு அனுமதிப் பத்திரம் பெற ஆங்கிலத்தில் எழுதுகிறார்கள். குடியிருப்பு அத்தாட்சிப் பத்திரம் பெறுவதற்கு ஆங்கிலத்தில் எழுதுகிறார்கள். விறகு வெட்ட அனுமதிப்பத்திரம் ஆங்கிலம். இவ்வாறு தொட்டதற்கெல்லாம் ஆங்கிலம் எடுத்ததற்கெல்லாம் ஆங்கிலம் என்ற நிலை மாற்றப்பட வேண்டும். பொதுமக்கள் தம் தொடர்புகளை தமிழிலேயே செய்யக்கூடியதாகப் பிரச்சாரம் செய்யப் படல் வேண்டும். எல்லாவற்றையும் தமிழில் செய்யும்படி பொது மக்களை ஊக்குவிக்கத் தமிழ் வளர்க்கும் மன்றங்கள் முன்வரவேண்டும். எல்லாத் தமிழ் மக்களும் அரசாங்கத்துடனான சகல தொடர்புகளையும் தமிழில் வைக்கும் நாளே இந்நாட்டுத் தமிழர்களின் பொன்னாள்.

### தமிழன் கேட்கவேண்டிய கேள்வி

இன்றைய நிலையில் இலங்கையில் வசிக்கும் ஒவ்வொரு தமிழ் மகனும் தனது மொழியின் உபயோகம் பற்றி யோசிக்க வேண்டும். எல்லாத் தொடர்புகளையும் தமிழிலேயே செய்ய முன்வர வேண்டும் தமிழில் செய்வதால் காலதாமதமாகிறது எனப் பொது மக்கள் கூறுவதும், தமிழில் செய்தால் சிங்களப் பகுதிகளுக்கு இடமாற்றத்தை எதிர்பார்க்க நேரிடும் என்றும் அரசாங்க ஊழியர்கள் கூறுவது பொருத்தமான காரணங்கள் அல்ல.

ஒவ்வொரு தமிழனும் இன்று தன்னைத்தானே கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்வி நான் எனது கடமைகளை ஆங்கிலத்தில் செய்ய வேண்டுமா? எனது தாய் மொழியில் செய்யக் கூடாதா? என்பதே.

எனவே இன்று முதல் இயலுமான சகல துறைகளிலும் எனது அன்னைத் தமிழ் மொழியிலேயே செய்வேன் எனச் சபதம் செய்ய வேண்டும். எல்லோரையும் செய்யும்படி தூண்டவேண்டும். நாம் எமது மொழியில்

**தமிழ்ப் பித்தன்**

கடமைகளைச் செய்வது எந்த வகையிலும் இன்னொரு இனத்துக்கு எதிரானதல்ல.

நாமே எமது மொழியை உபயோகிக்க வேண்டும். பாதுகாக்க வேண்டும் வளர்க்க வேண்டும். ஆங்கில மொழியை வளர்க்க ஆங்கிலேயன் இருக்கின்றான். சிங்கள மொழியை வளர்க்கச் சிங்களவன் இருக்கிறான். தமிழ் மொழியை வளர்க்க யார்(?) இருக்கிறார்கள். தமிழன் தான் வளர்க்க வேண்டும். அவனும் ஆங்கிலத்தையே வளர்ப்பேன். நீ எக்கேடாவது கெட்டுப் போ என்று கூறிவிட்டால் தமிழின் எதிர்காலம் என்ன?

ஒவ்வொரு தமிழனும் இன்று என்னயோசிக்கிறான்? நான் ஒருத்தன் மட்டும் தமிழில் செய்தால் தமிழில் நந்தி அடித்தால், தபால் முகவரி எழுதினால் தமிழ் வளர்ந்து விடுமா? உரிமை கிடைத்துவிடுமா? என்பதே.

ஒருவன் மட்டும் ஒரு தேரை இழுத்து விட முடியாது. எனவே மொழித் தேரை இழுப்பதற்கு எல்லாத் தமிழரும் ஒன்று கூட வேண்டும். தேர் இழுக்க வந்த ஒருவனும் போதிய ஆட்கள் இல்லை என விட்டு விட்டால், தேர் இருப்பிலேயே நின்றுவிடும். எனவே இன்று தமிழில் கடமையாற்றும் ஒவ்வொருவரும் ஏனையவரும் தமிழில் கடமையாற்றும்படி தூண்ட வேண்டும்.

தமிழ் மொழியைச் சகல துறைகளிலும் உபயோகிக்க என்ன! செய்ய வேண்டும்?

தமிழ் மொழியில் தமது கடமைகளைச் செய்யும்படி பொது மக்களுக்குப் பிரச்சாரம் செய்ய வேண்டும். 1956ல் தனிச் சிங்களச் சட்டம் கொண்டுவந்த பின்னர் கூட தமிழ் மொழியில் அலுவல்களைச் செய்யும்படி தூண்டும் எந்த இயக்கமும் ஏற்படவில்லை. அரசாங்கத்திடம் தமிழ் மொழிக்கு உரிமை கேட்க முன்னர், தமிழ் மக்களுக்கே தம் மொழிமேல் பற்றை ஏற்படுத்த வேண்டும். தமிழில் மட்டும் தம் அலுவல்களை செய்யக் கூடியவர்களாக இவர்களைத் தயாராக்கவேண்டும். தமிழ் அரசியல் வாதிகள் தமிழில் மட்டுமே பேசும்விரதத்தைக் கைக்கொள்ள வேண்டும். பத்திரிகைகளில் எழுதுவதாலோ, துண்டுப் பிரசுரங்களை வெளியிவதாலோ இதனைச் சாதித்து விட முடியாது.

தமிழில் எழுதினால் பதில் வரத்தாமதமாகிறது என்பது பொதுமக்களின் குறை. எனவே தமிழ் அரச ஊழியர்கள், முதலில் அரசகரும மொழிக் கடிதங்களுக்கு பதில் எழுதிய பின் தமிழ் மொழிக் கடிதங்களையும், பின் ஆங்கில கடிதங்களையும் கவனிக்கலாம். இதனால் பொது மக்களின் குறையும்

**தமிழியக்கம்**

நீங்கும். தமிழ் உபயோகிப்பதற்கும் தூண்டுதலாக இருக்கும்.

இன்று ஒவ்வொரு திணைக்களங்களிலும் தமிழ் மன்றங்களும், தமிழ் இலக்கிய மன்றங்களும் உள்ளன. ஆண்டு தோறும் பாரதி விழாவையோ அல்லது நவராத்திரி விழாக்களை மட்டும் கொண்டாடுவதுடன் தம் கடமைகள் முடிந்து விட்டதாகக் கருதுகின்றன. பின்னர் கடிதத் தலைப்பில் மட்டும் இயங்குகின்றன. அடுத்து நவராத்திரி விழாவுக்கு மட்டுமே விழித்து எழுகின்றன. இந்நிலைமை நீடிக்கப்பட்டு மொழிக்கும் மக்களுக்கும் இவை தொண்டாற்ற முன்வர வேண்டும்.

நடைமுறைத் தமிழ் இயக்கம், கோணை நகர்த்தமிழணி இயக்கம், இளந்தமிழர் மன்றம் போன்றவை தமிழில் தங்கள் தொடர்புகளை வைத்திருக்கும்படி பொதுமக்களை மேலும் மேலும் தூண்ட வேண்டும் பிரதமருக்கும் ஏனையவர்களுக்கும் எம் மொழிக்கு உரிமை தரும்படி கேட்டுக்கடிதங்கள் எழுதுவதுடன் மட்டும் நின்றுவிடாது எமது மக்களுக்கு எம் மொழியில் பற்றினை ஏற்படுத்த நாட்டிலுள்ள எல்லாத் தமிழ் மன்றங்களும் முன்வரவேண்டும். தொண்டர்களைச் சேர்த்துப் பிரச்சாரம் செய்ய வேண்டும். தாமே முதலில் செய்து காட்ட வேண்டும்.

அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் உட்பட ஏனைய மொழிவழித்தொழிற்சங்கங்களில் பல ஆயிரக்கணக்கான தமிழ் ஊழியர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். இவர்கள் எல்லோரையும் தமிழை எல்லாத் துறைகளிலும் உபயோகிக்கும்படியும், தமிழில் கையொப்பம் வைக்கும்படியும் இச் சங்கங்கள் வலியுறுத்தலாம் இவையெல்லாம் சின்ன விடயங்கள் என்று இச் சங்கங்கள் அலட்சியப் படுத்தக்கூடாது. தமிழில் கையெழுத்துப் போடாவிட்டால் என்ன? என்ற நிலை ஏற்படக்கூடாது. ஒவ்வொரு தமிழனும் எந்த வகையிலாவது தம்மொழியை உபயோகிக்கும்படி செயற்படல் வேண்டும்.

இவை மட்டும் போதாது. தமிழ்ப்பகுதிகளில் எத்தனையோ இளைப்பாறிய ஆசிரியர்களும், அரசாங்க உத்தியோகத்தர்களும் இருக்கிறார்கள். இவர்கள் ஒன்று சேர்ந்து தத்தம் ஊர்களில் தமிழ் வளர்ச்சிக்கழகங்களை ஆரம்பிக்க வேண்டும். தாங்களே தமிழில் கடமையாற்ற முன்வரவேண்டும். தமிழில் செய்வதற்கு உதவி கேட்கும் பொது மக்களுக்கு அந்த உதவியைச் செய்து தர முன்வரவேண்டும்.

தமிழர் கூட்டணிக் கூட்டங்களில் தமிழைச் சகல துறைகளிலும் உபயோகிப்பது பற்றி வலியுறுத்திப் பிரச்சாரம் செய்யப்பட வேண்டும். எந்தெந்த வகைகளில் தமிழை உபயோகிக்க முடியுமோ அத்தனை துறைகளிலும் எம் அன்னைத் தமிழ் மொழியை உபயோகிக்க முன்வரவேண்டும்.

நியாயமற்ற சில காரணங்களை மீண்டும் மீண்டும் எடுத்துக் காட்டித் தமிழர்கள் தொடர்ந்தும் ஆங்கிலத்தையே கட்டிப்பிடித்துக் கொண்டிருந்தால், நிச்சயம் ஒரு நாள் ஆங்கிலத்தின் இடத்தைச் சிங்களம் எடுத்தே தீரும்.

அரசாங்கத்தில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு தம் மொழிப்பற்றைக் காட்ட ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. அரசாங்க ஊழியர்களாக இருப்பதால் தமிழ் மக்களின் போராட்டத்தில் சுதந்திரயாகக் கலந்து கொள்ள முடியவில்லை. ஆனால் புதிய அரசியல் உறுதியுரைப் பத்திரத்தில் தம் உறுதியுரையைத் தமிழில் செய்வதன் மூலம் தம் பற்றைக் காட்ட அரச ஊழியர்கள் முன்வருவார்களா? அல்லது அதிலும் ஆங்கிலத்திலேயேசெய்வார்களா?

எதிலும் தமிழ், எல்லாம் தமிழ், எங்கும் தமிழ் என்ற நிலை ஏற்படாதவரையில், எம்மொழியை நாமே உபயோகிக்க தயங்கி, பயந்து நடுங்கும் நிலை மாற்றப்பட்டு, எம் மொழியை உபயோகிப்பதில் நாமே பெருமைப்படும் நிலைமை ஏற்படும் வரை அரசாங்கத்திடம் எமது மொழியுரிமையைப் பற்றிக் கதைப்பதில் என்ன நியாயம் இருக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தகுதிக்கும் திறமைக்கும் முதலிடம் தரும் இலட்சணம்!

"தகுதிக்கும் திறமைக்குமே முதலிடம் தரப்படும்"
— கௌரவ கல்வி அமைச்சர்

ஜனாப் எம். எம். முஸ்தபா எருக்கலம் பிட்டி மத்திய மகா வித்தியாலயத்தின் உதவி ஆசிரியர். இவர் '60—61' ஆம் ஆண்டுகளில் அட்டாளைச்சேனை ஆசிரிய கலாசாலையில் பயிற்சிபெற்றவர். 66 ஆம் ஆண்டு பல்கலைக் கழகத்துக்கு முழுச்சம்பள லீவுபெற்றுச் சென்று 69 ஆம் ஆண்டில் பட்டதாரித் தேர்வில் சித்தியடைந்தார். அவர் தேர்வுக்குத் தோற்றிய பாடங்கள்—

புவியியல், பொருளியல், தமிழ்.

இவருக்குத் தேர்வின் கடைசி நாளிருந்து பட்டதாரி சம்பளம் வழங்கப்படுகிறது.

ஜனாப் எம். எஸ். ஏ. ரகீம் சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தின் உதவி ஆசிரியர். இவர் 61—62 ஆம் ஆண்டுகளில் கண்டி ஆசிரிய கலாசாலையில் பயிற்சி பெற்றவர். அரசாங்கத்துக்கு ஒரு சதம் கூடச் செலவின்றி முழுச் சம்பள லீவு பெறாது பல்கலைக் கழகம் செல்லாது வெளியிலிருந்து படித்து '69 ஆம் ஆண்டில் பட்டதாரித் தேர்வில் சித்தியடைந்தார். இவர் தேர்வுக்குத் தோற்றிய பாடங்கள்—

புவியியல், பொருளியல், தமிழ்.

இவருக்கு இன்று வரை பட்டதாரி ஆசிரிய நியமனமோ உரிய சம்பளமோ கிடைக்கவில்லை.

இருவருமே இன்று வரை மேல் வகுப்புகளில் கற்பிக்கிறார்கள் இருவருமே பேராதனைப் பல்கலைக்கழகத்தின் சமகாலப்பட்டதாரிகள். ஒரே பாடங்களில் ஒரே பாடத்திட்டத்தில் ஒரே தேர்வில் பரீட்சிக்கப்பட்டவர்கள். இருவரும் முஸ்லிம்கள் இருவரும் வட மாகாணத்தவர்கள். முன்னவர் மன்னார். பின்னவர் யாழ்ப்பாணம்.

இந்தப் பாகுபாடு ஏன்? தீர்க்கப்படுமா? இங்கு எதற்கு முதலிடம் தரப்பட்டது.?

**அடுத்த இதழில் 3ஆம் தர அதிபர் பதவி.**

— தகவல் தருபவர்: எம். சுல்தான்.

# சரித்திரம் படைப்போம்! தரித்திரம் துடைப்போம்!!

## கட்டளை பிறக்கும் நாளினைக் காத்திரு! களம்புகும் திருநாளினைப் பார்த்திரு!!

நீலம்—இது விஷத்தின் நிறம்.

சிகப்பு—இது அபாய விளக்கு.

இது இரண்டும் இணைந்தால் எப்படியிருக்கும்—ஆம்—விஷமத்தனமான விஷ நோக்காக நடக்கின்ற சுதந்திரக்கட்சிக்கு அபயமருள வந்திருக்கிறார்கள் அபாயக் கொடி பிடிக்கின்றன கொள்ளைக் கோஷ்டியினர்.

சம்மட்டியினால் அடித்து, அரிவாளால் அரியப்புறப் பட்டிருக்கும் இந்த அற்பர் கூட்டத்துடன் நானும் ஒரு காலத்தில் இருந்தேன் என்பதை நினைக்கும்போது அதுவே பாபகரமான—வெட்கமான நாட்களாக எனக்குத் தோன்றுகின்றது.

அதை எண்ணி அழுது கொண்டேன்.

நெற்றியில் திருநீறும் சந்தணப் பொட்டும் வைத்துக் கொண்டு கம்யூனிஸ்ட் கட்சியின் கூட்டங்களுக்குப்போன என்னைக் கேலியோடு பார்ப்பது மாத்திரமன்றி—"தள்ளியிரும் தோழர், ஐயர் வாரார்" என்றும் கேலி செய்வதுண்டு.

நல்லகாலம்! நரிகளின் பிடியிலிருந்து தப்பி நமதணியின் புனிதமான பணிக்கு என்னை அர்ப்பணித்துள்ளேன்.

இது எனது பிராயச்சித்தமாகும். இதனால் நான் மாக்சிய தத்துவத்தை எதிர்க்கவில்லை. நான் என்றும் ஒரு மார்க்ஸிஸ்ட். ஆனால்—நான் தமிழன். முதலில் எனது இனத்தின் பிரச்சினை முடியட்டும். எனது தமிழன் தலைநிமிரட்டும்.

**எஸ். வில்வராஜன்**

எனது நாட்டிலுள்ள தமிழர் உரிமையை வென்றெடுத்த பின்னரே நான் உலகத்துவத்தைக் கற்கவேண்டும்.

இப்போது விஷயத்திற்கு வருவோம்—

இந்த ஆட்சியோ அல்லது இனிமேல் வரப்போகும் யூ-என்-பி ஆட்சியோ தமிழ்ப்பேசும் மக்களுக்கு எதுவிதமான நன்மையும் செய்யப்போவதில்லை என்பதை நாம் ஒவ்வொருவரும் நன்றாக உணர்ந்தாகவேண்டும்.

ஏனெனில் இவ்விருகட்சிகளும்...

தமிழர்களை இந்த நாட்டிலிருந்து துரத்தியடிப்பது எப்படி?

தமிழர்களைச் சிங்களவராக்குவது எவ்வாறு?

மலைநாட்டாரைக் கலைப்பது எப்படி?

தமிழர் பகுதிகளைக் கைப்பற்றுவது எங்ஙனம்?

அழிந்த சிங்களவர்கட்காக அழிக்கவேண்டிய தமிழர்கள் எத்தனை?

தமிழ்மொழியைச் சிதைப்பது எவ்வாறு?

என்பன போன்ற கேள்விகளில் அக்கறை செலுத்துகின்றனவே தவிர-தமிழ்ப்பேசும் இனத்திற்கு இந்த இரண்டு சகுனிகளாலும் விமோசனம் கிடையாது.

எனவே,

தமிழ்ப்பேசும் இனத்தின் எதிர்காலக் கடமைகள் என்ன? என்பதைத் தர்க்க ரீதியாகச் சிந்தித்தாகவேண்டும். செயலாற்றியாக வேண்டும்.

மிக மிக விரைவாக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் நமக்கு ஏராளம் உள்ளன, அவசரமாக நமதினத்தை நாம் காப்பாற்றியாகவேண்டும்.

துட்டரின் கைகளால் துவம்சமாகுமுன் நாம் திட்டமிட்டு நமது சுதந்திரத்தை மீட்டாகவேண்டும்.

நாம் தமிழினமா? அல்லது சிங்கள இனமா? என்பதைத் தீர்மானிக்கும் இறுதிக்கட்டம் அண்மித்துவிட்டது?

விட்டுக்கொடுக்காமல் வீரப் போராட்டம் நடத்தித் தியாகத் தழும்பேற்கும் நாள் நெருங்கிவிட்டது.

குட்டக் குட்டக் குனிந்த நமது இனம் தனது கூன் நிமிர்த்திக் கெட்டித்தனமாகப் போராடும் பெருநாள் கிட்டிவிட்டது?

ஆம்—தமிழா! ஆம் வீர காவியம் படைக்க விறுகொண்டுவாவா என உன்னை அழைக்கின்றாள் தமிழன்னை.

சிங்களவர் குடியேறினால் கைதருகிறது சிங்கள ஆட்சி. தமிழர் குடியேறினால் கை தாக்கின்றது, அதே ஆட்சி!

இதனை எண்ணிப்பார்.

இவர்கள் திட்டம் என்ன, இவர்களது பூரண நோக்கம் தானென்ன? இதை நீ அறிவாயா? புரிவாயா?

புரிந்தும் புரியாதவர்களைப் போல் இருக்கும் பருந்துகளை விட்டுத்தள்ளு!

மருந்துக்கும் உதவாதவர்கள் அவர்கள்!

பருந்துகளுக்குப் பந்தம் பிடித்து விருந்துண்பவர்கள் அவர்கள்.

காட்டிக்கொடுத்தே பிழைத்துப் பழக்கப்பட்ட காதகவன்னியர்கள் அவர்கள்—

அவர்கள் காலத்தால் திட்டப்படப்போகின்ற எட்டப்பர்கள்.

சரித்திரத்தில் கறை இலக்கியம் காணப்போகும் கசடர்கள் அவர்கள்.

அந்த எச்சி நாய்களை விடு: விட்டுவிட்டு—

நீ வா—ஓடிவா—வரிந்து கட்டிவா—தெளிந்துவா—உன் உடல் - பொருள் - ஆவி அத்தனையும் தா. உன் உடலைத்தா! உயிரைத்தா!

உனது அன்புத் தாயாரின் அல்லலை—அழுகையைப் போக்காத நீ ஒரு தமிழனா?

நீ உண்மையான தமிழனானால் வலிந்து கிளர்ந்து எழுந்து பறந்துவா! பணிந்தது போதுமடா—துணிந்துவா—மனம் கனிந்துவா.

சரித்திரம் படைப்போம்-நமது தரித்திரம் துடைப்போம்—விலங்கினை உடைப்போம்.

கூட்டணியில் அங்கம் பெறுவீர்—கூட்டாக எழுவீர்—

அஞ்சாத நெஞ்சுடன்—அடங்காத பற்றுடன் பஞ்சமா பாதங்களைப் பாடையேற்றிடத் துடித்துவா.

தியாகமின்றேல் வெற்றியே இல்லை;

அழிவு பிறந்தால் முடிவு பிறக்கும்—

ஆம்—தலைநிமிர்ந்துவாழப் போகின்றாயா? அல்லது தலைகுனிந்து மாழப்போகின்றாயா?

இதனை நீயே முடிவுசெய்—

# முஸ்லிம் கடிதம்

உன் கடிதம் கண்டேன்; மகிழ்ச்சியடைந்தேன். நீ கூறியதில் பெரும்பாலும் யாவற்றையும் நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் அதற்கான வழிவகைகளைப் பற்றிச் சிந்திக்கும்போதுதான் அதைப் பற்றியதான பிரச்சினைகளே புலப்படுகின்றன.

இந்த நாட்டிலே தொன்று தொட்டு சிங்களவர்களும், முஸ்லிம்களும் ஒற்றுமையாகவே வாழ்ந்து வருகின்றனர் எனச் சிங்கள அரசியல்வாதிகள் எப்படித்தான் கூறிவந்தாலும் இவற்றையெல்லாம் முஸ்லிம்கள் அப்படியே நம்புவதற்கு அவர்கள் இலங்கை வரலாற்றை ஒன்றும் அறியாதவர்களல்ல.

1915ல் ஏற்பட்ட சிங்கள—முஸ்லிம் இனக்கலவரத்தினால் ஏற்பட்ட இரத்த ஆறு ஓடிய வரலாற்றை அவர்கள் இன்னும் மறந்துவிடவில்லை. சிங்கள அரசியல்வாதிகளின் பிரச்சாரத்தினால் அவர்கள் எதிர்பார்ப்பது எப்படியாவது முஸ்லிம் மக்களை தமிழ் மக்களிடமிருந்து பிரித்துவிடவேண்டுமென்பதே. அவர்களின் எதிர்ப்பார்ப்பு 'வெறும் எதிர்பார்ப்பாகவே' இருக்குமன்றி ஒருபோதும் நடைமுறையில் நடந்துவிடப்போவதல்ல.

சிங்களவர்கள் மட்டுமல்ல, சிங்களப் பத்திரிகைகளும் முஸ்லிம்களைத் இழித்துரைத்து, துவேஷித்து வருவதும் கண்கூடு. உதாரணமாக 16-1-1973ல் வெளியான 'சதுட' என்ற சிங்கள வார இதழ் வேண்டுமென்றே இஸ்லாமிய வரலாற்றை மாற்றி எழுதி, அதனை வாசிப்போருக்கு தவறான கருத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றது. 27-12-72ல் வெளியான 'தவஸ' என்ற சிங்களத்தினசரியின் ஆசிரியர் தலையங்கம் கூட முஸ்லிம்களை இழித்துரைத்து எழுதப்பட்டிருக்கின்றது. இவ்வாறான செயல்கள் மூலம் சிங்களவர்கள் முஸ்லிம்களின் மேல்கொண்டுள்ள வெறுப்பை, சிங்களப் பத்திரிகைகள் மென்மேலும் வளர்த்துக்கொண்டு செல்கின்றன என்பது நன்கு புலனாகின்றன.

**எம். எல். எம். இக்பால்**

இந்நிலைமையில் முஸ்லிம்களும் சிங்களவர்கள் மேல்—(இன அடிப்படையில்) வெறுப்புக்கொள்ள முற்பட்டபோதும் அதனை நடைமுறையில் காட்ட முடியாதவாறு வேறு சூழ் நிலைகள் நிலவுவதையும் அவதானிக்க வேண்டும். அதாவது இலங்கையில் வசிக்கும் முஸ்லிம்களில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் 30% மானோர் வசிக்க, ஏனைய மாகாணங்களிலும் மிகுதி 70% மானோர் வாழ்ந்து வருகின்றனர். இந்த இடத்தில்தான் ஒரு விடயத்தை அவதானிக்கவேண்டும்.

தொன்று தொட்டு சிங்களவர்களும், முஸ்லிம்களும் இந்நாட்டில் ஒற்றுமையாகவே வாழ்ந்து வருகின்றனர் என்று எப்படித்தான் சிங்கள அரசியல் வாதிகள் வரலாறு அறியாத மந்த நிலையில், அல்லது அறிந்தும் அதனை வேண்டுமென்றே மறைத்துப் பிரச்சாரம் செய்து வந்தாலும், முஸ்லிம்கள் சிங்களவர்களுடன் மனமுரண்டாகவேனும் ஒற்றுமையாக வாழவேண்டிய நிலையிலேயே இருக்கின்றார்கள். ஏனெனில் இலங்கையில் முஸ்லிம்கள் பரந்து வாழ்வதும், அதிலும் பெரும்பான்மையோர் சிங்களப் பிரதேசங்களில் வாழ்வதுமாகும்;

அதுமட்டுமல்ல 1915ல் நடைபெற்ற இனக்கலவரத்தை மனதில் வைத்து இன்னும் சிங்களவர்களுடன் முஸ்லிம்கள் வேற்றுமையாக, போராட்ட மனப்பான்மையுடன் நடந்து மீண்டும் ஒரு இனக்கலவரம் ஏற்பட்டால் அது முன்னையதை விட மிகமோசகரமானதாயிருக்கும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. ஏனெனில் இப்போது சிங்களவர்களால் 'சிங்கள முக்

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# உண்மைகள் சாவதில்லை!

புதிய அரசியல் சாசனத்தில் மக்களின் அடிப்படை உரிமைகள் அனைத்தும் தெளிவாக வரையறுக்கப்படவில்லை—

அப்படி வரையறுத்துக் கூறப்பட்ட உரிமைகளுக்கும் அரசியல் சாசனத்தில் உத்தரவாதம் எதுவும் தரப்படவில்லை—

அடிப்படை உரிமைகளை அரசாங்கம் மீறினல் அதைத் தடுத்து நிறுத்த—தட்டிக்கேட்க பொது மக்களுக்கு உரிமை மறுக்கப்பட்டுள்ளது—

ஒரு நீதி மன்றத்துக்கு சென்று தமது அடிப்படை உரிமையை நிலைநாட்டும் சந்தர்ப்பம் பிரஜைகளுக்கு தரப்படவில்லை—

இந்த உண்மைகளை அரசியல் நிர்ணய சபையில் புதிய அரசியல் சட்டம் தயாரிக்கப்பட்ட நேரத்தில் இந்நாட்டிலுள்ள சட்டமேதைகளும், எதிர்க்கட்சியினரும் தெளிவாக, திட்டவட்டமாகச் சுட்டுக்காட்டியிருக்கின்றனர்.

தமிழரசுக் கட்சியும், ஐக்கியதேசியக் கட்சியும் மக்கள் தங்கள் அடிப்படை உரிமைகளை நீதிமன்றம் ஒன்றின் மூலம் நிலைநாட்டும் உரிமை அரசியல் சட்டத்திலேயே வழங்கப்படவேண்டும் என்று திருத்தம் கொண்டுவந்தன.

ஆனல் ஆளுங்கட்சியினரோ பிடிவாதமாக எதிர்க்கட்சிகளின் திருத்தங்களை இது சம்பந்தமாக ஏற்க மறுத்தது மட்டுமல்ல—

தாம் தயாரித்துள்ள புதிய அரசியலமைப்புச் சாசனத்தில் மக்களின் அடிப்படை உரிமைகளுக்கும் சுதந்திரங்களுக்கும் உத்தரவாதம் அளிக்கப்பட்டிருப்பதாக அரசியல் அமைப்பு சட்ட விவகார அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா அரசியல் நிர்ணய சபை விவாதத்தின் போது அடித்துப்பேசி — சொற்சிலம்பம் ஆடி — கண்கட்டு வித்தை காட்டவும் தவறவில்லை.

அடிப்படை உரிமைகள் சம்பந்தமாகவும் ஏனைய தமிழினத்தின் உரிமைகள் சம்பந்தமாகவும் அரசாங்கத்தின் விட்டுக்கொடாத பிடிவாதப்போக்கினல், தமிழரசுக் கட்சி அரசியல் நிர்ணய சபையைப் பகிஷ்கரித்து வெளியேறியது.

அடிப்படை உரிமைகளுக்கு உர்தரவாதமும், நீதிமன்றம் ஒன்றுக்கு சென்று அவற்றை நிலைநாட்டும் பிரஜைகளின் உரிமையும் அரசியல் சட்டத்திலிடம்பெறக் கூடிய முறையில் அது திருத்தப்படவேண்டும் என்று கடந்த ஓராண்டாக தமிழர் கூட்டணி கோரி வருகிறது—கிளர்ச்சி செய்து வருகிறது!

தனது ஆறு அம்சக்கோரிக்கைகளில் ஒன்ருக இந்த அடிப்படை உரிமைகள் பற்றிய கோரிக்கையையும் தமிழர் கூட்டணி முன்வைத்துப்போராடி வருகிறது!

அடிப்படை உரிமைகள் சம்பந்தமாக தமிழரசுக்கட்சியினர் அரசியல் நிர்ணய சபையில் அன்று எடுத்துக்காட்டியது எவ்வளவு தூரம் உண்மையானது என்பதை காலம் இன்று எடுத்துக்காட்டிவிட்டது!

இரண்டு தீயசக்திகள் ஒன்றையொன்று எதிர்த்துப் போராடும் போது ஒரு நன்மை விளையுமென்பார்கள்.

தமிழினத்தைப்பொறுத்தவரை — ஏரிக்கரை நிறுவனமும் சரி—அரசாங்கமும் சரி, இரண்டும் ஜன்ம விரோதிகளே!

இந்த இரண்டு ஜன்ம விரோதிகளும் ஒருவரையொருவர் பிடித்து விழுங்க அண்மையில் நடந்த இழுபறியின் போதுதான் தமிழரசுக்கட்சி சுட்டிக்காட்டிய அடிப்படை உரிமை பற்றிய உண்மை அம்பலத்துக்கு வந்திருக்கிறது!

ஆம், அரசியல் சட்ட நீதிமன்றத்தில், ஏரிக்கரை மசோதாபீது நடைபெற்ற விசாரணையின்போது — புதிய அரசியல் சாசனத்தில் அடிப்படை உரிமைகளுக்கு அரசாங்க உத்தரவாதம் எதுவும் வழங்கப்படவில்லை என்ற உண்மையை அரசாங்கமே பகிரங்கமாக ஒப்புக்கொண்டு விட்டது!

சிலரைப் பலநாட்கள் ஏமாற்றலாம்; பலரைச் சிலநாட்கள் ஏமாற்றலாம்; ஆனல் எல்லோரையும் எக்காலத்தும் ஏமாற்ற முடியாது என்று ஓர் பழமொழியுண்டு. அது போல இந்நாட்டு மக்களை நீண்ட நாட்கள் ஏமாற்ற முடியாது விரைவில் உண்மையை தம் வாயாலேயே கக்க வேண்டிய சந்தர்ப்பம் ஆட்சியாளருக்கு ஏற்பட்டதையிட்டு மகிழ்ச்சியடைகிறோம்.

அதுமட்டுமல்ல — அரசாங்கத்தின் சார்பில் அரசியல் சட்ட நீதிமன்றத்தில் வாதாடிய பிரபல சட்ட நிபுணர் திரு. தியாகலிங்கம், ஒரு பெரும் உண்மையையும் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

அதாவது—ஒற்றையாட்சி அரசியலமைப்பின் கீழ் அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதம் வழங்கப்படுவதில்லையென்றும் சமஷ்டி அரசியலமைப்பின் கீழ் மட்டுமே உத்தரவாதம் வழங்கப்படுவதாகவும் எடுத்துக்காட்டியிருக்கிறார்!

இவற்றிலிருந்து தமிழரசுக் கட்சியினரின் தீர்க்கதரிசனமும் தெளிந்த அரசியல் ஞானமும் தெளிவாகிறதல்லவா?

அரசியல் சாசனத்தில் அடிப்டை உரிமைகளுக்கு உத்தரவாதம் தரப்படவில்லை என்றது தமிழரசுக்கட்சி— இல்லை தந்திருக்கிறோம் என்று வாதிட்டார் அரசியலமைப்பு அமைச்சர் டாக்டர் கொல்வின்.

இன்று அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதம் இல்லையென்பதை அவர்களே ஒப்புக்கொண்டு விட்டார்கள்!

தமிழ் மக்களினது மட்டுமல்ல—சிங்கள மக்களினதும் அடிப்படை உரிமைகளையும் சுதந்திரங்களையும் நிலைநாட்டுவதற்கு ஒற்றையாட்சி உகந்ததல்ல — சமஷ்டி அரசியலமைப்பே உகந்தது என்று அரசியல் நிர்ணய சபையில் வாதிட்டது தமிழரசுக்கட்சி!

சமஷ்டிக் கோரிக்கை சிங்கள மக்களின் பிரதிநிதிகளால் அன்று நிராகரிக்கப்பட்டது!

இன்றே, சமஷ்டி அரசியலமைப்பு இருந்திருந்தால்—சிங்கள மக்களின் உரிமைகளுக்கு கூட அது பாதுகாப்பு அளித்திருக்கும் என்பது தெளிவாகிவிட்டது!

சூரியன் ஒளியை கையால் எப்படி மறைந்துவிட முடியாதோ — அதே போல் தமிழரசுக்கட்சி சுட்டிக்காட்டி வரும் உண்மைகளையும், நீண்டகாலம் மூடி மறைத்து விட முடியாது!

ஏனெனில் உண்மைகள் எப்போதும் உண்மைகள்தாம் அவை சாவதில்லை!

இதைக்காலம் உணர்த்துகிறது—மேலும் உணர்த்தும்!

# புத்தர் போதித்தது அன்பு! ஆட்சியாளர் செய்வது வம்பு! ஐயையோ இதுவென்ன பண்பு!

அன்புதான் இன்ப ஊற்று! அன்புதான் உலக ஜோதி. அன்புதான் உலக மகாசக்தி. இதுதான் போதி மரத்தடிப் புத்தர் போதித்த பொன்மொழி. இதுதான் அவர் கடைப்பிடித்த வழி. இதனல்தான் உலகப்புகழ் பெற்றார். உலக உத்தமராக வாழ்ந்தார். இன்றும் அவர் புகழ் பாடிக்கொண்டு எத்தனையோ நாடுகள் இருக்கின்றன. அன்பால் சாதிக்க முடியாத ஒன்றை அதிகார பலத்தாலோ, ஆயுதபலத்தாலோ சாதிக்கமுடியாது என்பது, அவரின் அசைக்க முடியாத நம்பிக்கை. அன்புதான் உலகத்தில் சிறந்த ஆயுதம் என்பது அவரின் கொள்கை.

இந்தக் கொள்கையை அவர் கடைசிவரை விட்டுக்கொடுக்கவில்லை. பிற உயிர்கள் துன்பப்படுவதை கண்டால் அது தனக்கு வந்த துன்பமே. எனக்கருதி அவ்வுயிரின் துன்பத்தைத் துடைக்கத் தன்னுயிரையும், கொடுக்கக்கூடிய நிலையில் இருந்தார் புத்தர். அவர் தனது கொள்கையைப் பரப்புவதற்காக அடுத்தவனை சுரண்டுவதையோ அடுத்த மதத்தை அழிப்பதையோ விரும்பவில்லை.

அன்பு - இதுதான் என் கொள்கை என்றார்—எவ்வுயிரைக் கண்டாலும் அடிக்காதீர்கள் உதைக்காதீர் அன்பைச் செலுத்துங்கள் என்றார் — அவரின் தங்கமான கொள்கை அனேக மக்களை மட்டுமல்ல அதிகமான நாடுகளையே கவர்ந்தது. இதனல் புத்தமதம் வளர்ந்தது—புத்தரின் புகழும் உயர்ந்தது. எல்லா மதத்தவர்களும் புத்தரின் புனிதமான கொள்கைக்குத் தலைவணங்கினர்கள்—அவரைப் போற்றினர்கள்—வாழ்த்தினர்கள்—

இன்று புத்த பெருமானின் கொள்கையைக் கடைப்பிடித்து அவரைத்தெய்வமாக வணங்கியவண்ணம் எத்தனையோ கோடி மக்கள் வாழ்கின்றார்கள். இலங்கையிலும் பெரும்பான்மையினர் பௌத்தர்கள்தான் என்பதை நான் சொல்லித் தெரியவேண்டியதில்லை. புத்தரின் போதனை படித்தவர்கள் என்பதையும் நான் சொல்லத்தேவையில்லை.

இதே புத்தபிரானின் போதனையைப் படித்தவர்கள் — அவரையே தெய்வமாக வணங்குபவர்கள் இன்று இலங்கையில் செய்வதென்ன? சிங்களமொழிக்கு அரசியல் சட்டத்தில் இடம் கொடுத்தார்கள் இதை நாம் எதிர்க்கவில்லை— பௌத்த மதத்துக்கு அரசியல் சட்டத்தில் உரிமை கொடுத்தார்கள்; இதைநாம் தடுக்கவில்லை—சிங்களவராக இருக்கக் கூடாது தமிழராக மாறுங்கள், பௌத்த மதத்தை விட்டு எங்கள் மதத்துக்கு மாறுங்கள், என்று நாம் ..க்குரலிடவில்லை—

அரசியல் சட்டத்தில் எங்கள் மொழிக்கும் இடம் கொடுங்கள் — எங்கள் மதத்துக்கும் இடம் கொடுங்கள் என்றுதான் கேட்கின்றோம். இப்படிக்கேட்கும் எங்களை வகுப்புவாதி என்கின்றார்களே—பிற்போக்குவாதிகள் என்கின்றார்களே! இனக்கலவரத்தை உண்டாக்கும் தூரோகிகள் என்கின்றார்களே! வீதியெங்கும் இராணுவத்தையும் பொலிசையும் நிறுத்தி ஆயுதங்களைக் காட்டிப்பயமுறுத்துகின்றார்களே. உரிமை கொடு என்று கேட்கும் தமிழ் இளைஞர்களைச் சிறையிலிட்டுவாட்டுகின்றார்களே! வதைக்கின்றார்களே - இது புத்தரின் கொள்கைக்கு ஏற்றதா?

ஒரு உயிர் துன்பப் படுவதைப் புத்தர் விரும்பவில்லை; ஆனல் அதேபௌத்த வாரிசுகளின் ஆட்சியிலே ஓரினமே இரத்தக் கண்ணீர் வடித்துக்கொண்டிருக்கின்றதே? அதுமட்டுமல்ல-நாட்டுக்காக மாடாக உழைத்து ஓடாக உருகி நிற்கும் வேளையிலும் கள்ளத்தோணி என்ற பட்டங்கட்டி எம்மில் ஒரு பகுதியினரை நாடு கடத்துகின்றனரே இது நீதியா? நியாயமா? அன்பு செலுத்தும் வழி இதுதானு? இல்லை வேல் அன்பு என்பதன் பொருள் இதுதானு?

தமிழ் மொழிக்கு அரசியல் சட்டத்தில் இடம் கொடுப்பதால் எந்த ஒரு பிராணிக்கும் கஷ்டமிருக்காது மற்றய மதங்களுக்கும் இடம் கொடுப்பதால் எந்த வித நட்டமும் வராது.

ஆட்சியினரே நீங்கள் உரிமை கொடுக்காவிட்டாலும் அதே உரிமையைப் போராடிப் பெற நாம் துணிந்து விட்டோம். இனி எம்மை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது — உங்களிடம் கடைசியாக ஒன்று கூறுகின்றேன்—புத்த தர்மத்தை காப்பாற்றுங்கள்—மற்றைய நாடுகள் உங்களைப் பார்த்து கை கொட்டிச் சிரிக்கப் போகின்றன.

— நெடுங்கேணி நவம் —

## சிங்களவர்களும்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் நோக்கத்துடனேயே இந்த அத்துமீறல் குடியேற்றங்கள் நடைபெற்று வருவதாக தமிழர்களிடையே சந்தேகம் எழுந்ததும்—

இந்தச் சட்டமீறல் குடியேற்றங்களை தடைசெய்ய வேண்டுமென்று சிங்கள அரசாங்கங்களிடம் தமிழர் தலைவர்கள் கோரிக்கை விடுத்த போது, அதை அலட்சியப் படுத்திவிட்டு, சட்டவிரோதமாக குடியேறிய சிங்களவர்களுக்கு அவர்கள் குடியேறிய நிலங்களை அரசே சட்டப்படி சொந்தமாக்கி கொடுத்ததும்—

அதேநேரத்தில் அண்மைக் காலத்தில், மலையகத்தில் வேலை வாய்ப்பிழந்த இலங்கைப் பிரஜைகளான மலையகத்தமிழர்கள் 400 பேர் கிழக்கிலுள்ள புனைப்பகுதியில் குடியேறி விவசாயத்திலீடுபட்டதும்—

அப்படிக் குடியேறிய இந்த ஏழைத் தமிழர்களை அங்கிருந்து வெளியேற்ற வேண்டும் என்றும் மலையகத்தமிழர்கள் கிழக்குமாகாணத்தில் குடியேறுவது தடுக்கப்பட வேண்டுமென்றும் சிங்கள இனவெறிக்குரல் முடுக்கி விடப்பட்டதும்—

இப்படி எழுப்பப்பட்ட வகுப்புவாதக்குரலுக்கு அரசாங்கமும் செவி சாய்த்து அவர்களுக்கு எதிராக வழக்குகள் போட்டு துன்புறுத்தியதும்—

அவர்கள் குடியேறியுள்ள நிலங்களை அவர்களுக்கே கையளித்துவிடும்படி தமிழர் கூட்டணியும், ஏனையோரும் அரசுக்கு விடுத்த வேண்டுகோள்கள் நிராகரிக்கப்பட்டதும்—

இப்போது அவசர காலச் சட்டவிதிகளைப்பயன்படுத்தி மலையகத்தமிழர்களை குடியேறிய இடங்களிலிருந்து விரட்டவும், சிறைப்படுத்தவும், எதிர்காலத்தில் குடியேறவிடாமல் தடுப்பதற்கும் அரசாங்கம் நடவடிக்கையெடுத்துள்ளதும் - தெரிந்தவையே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீண்டாமையும் சாதியும் ஒழிய வித்திட்டது தமிழரசுக்கட்சியே!

## சாதிஒழிப்பை எதிர்த்த 'எம். சி.' இன்று 'சன்னதம்' பிடித்து ஆடுவது யாரை ஏமாற்ற?

அண்மையில் சிறுபான்மைத் தமிழர் மகாசபைபத்திரிகைகளில் ஒரு அறிக்கையை வெளியிட்டிருந்தது. அதாவது ஆலயப் பிரவேசப் போராட்டங்களில் சிறுபான்மைத் தமிழரை முன்னின்று எதிர்த்த சி. சுந்தரலிங்கத்தின் தனிநாடு கோரிக்கையை தமிழர் கூட்டணி ஏற்றுக்கொண்டது; இதனுல் சிறுபான்மைத் தமிழ் மக்கள் மீண்டும் சாதிவெறிக்கு உட்படுத்தப்படுவர்; இதை ஐந்தரை இலட்சம் சிறுபான்மைத் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் வகிக்கும் மகாசபை வன்மையாக எதிர்க்கிறது; என்றும் சிறுபான்மைத் தமிழ் மக்கள் இதை எதிர்க்கவேண்டுமென்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

இப்படிக்கூறி சிறுபான்மைத் தமிழரைத் தமிழர் கூட்டணியில் விடுதலைப் போராட்டத்திலிருந்து பிரிக்கலாமென்று பகற்கனவு காண்கிருர் எம். சி. சுப்பிரமணியம் அவர்கள். சுந்தரலிங்கம் அவர்களே தமிழர் கூட்டணியின் கோரிக்கைகளில் ஒன்ருன சாதி ஒழிப்பை ஏற்றுக்கொண்டிருக்கும்போது பாராளுமன்றத்தில் சாதி ஒழிப்பை மறுத்து நின்ற எம். சி. அவர்கள் தனிநாடு கோரிக்கையை எதிர்ப்பதில் வியப்பில்லை.

தமது செல்வாக்கைச் சிறுபான்மைத் தமிழரிடம் காப்பாற்றிக்கொள்வதற்காகவும், அரசாங்கத்திடம் நல்ல பிள்ளை என்று பெயரெடுப்பதற்காகவுமே இப்படியான பொய்ப்பிரசாரங்களை எம். சி. அவர்களும் அவரது சகாக்களும் செய்கின்றனர்.

மாவிட்டபுரம் ஆலயப்பிரவேசப் போராட்டத்தின் போது தமிழரசுக்கட்சியைச் சேர்ந்த சில எம். பி.க்களும் பிரமுகர்களும் எம். சி.யை அழைத்து சமாதானமாக ஆலயப் பிரவேசம் செய்வோம் வாருங்கள் என்று பேச்சுவார்த்தைக்கு அழைத்தபோது எம். சி. அவர்கள் அதைத் தட்டிக்கழித்து கல்வி அறிவு குறைந்த அப்பாவிச் சிறுபான்மைத் தமிழ் மக்களை சண்டைக்களரியில் இறக்கிய இவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பது மக்களுக்குத் தெரியும்.

ஐந்தரை இலட்சம் சிறுபான்மைத் தமிழ் மக்களின் ஆதரவும் தமக்குதான்என்று கூறுகின்ருர்கள். ஆனல் இவர்களின் ஆதரவுடன் புத்தூரில் ஆரம்பிக்கப்பட்ட பௌத்த பாடசாலைக்கு இன்று ஏற்பட்ட கதியைப் பார்த்தாவது தங்களுக்குச் சிறுபான்மைத் தமிழ் மக்களிடம் ஆதரவு இல்லையென்பதை ஏன் இன்னும் தெரிந்துகொள்ளவில்லை?

இன்றைய நாகரீகஉலகிலே சமுதாய மாற்றங்கள் தீவிரமாக முன்னேறிக்கொண்டிருக்கும் இவ்வேளையிலே சாதாரண மக்களும் சுதந்திரத்தின் தன்மையை அறிந்திருக்கும் இக்காலத்தில்—தனிநாடு கிடைத்தால் சிறுபான்மைத் தமிழினம் மீண்டும் நசுக்கப்படுமென்று கூறுவது அரசியல் செல்வாக்குக்காகக் கூறப்படும் ஒருவிதண்டாவாதமாகும்.

தமிழரசுக்கட்சியோ தமிழர் கூட்டணியோ தமது வரலாற்றில் தீண்டாமை ஒழிப்புக்கு எதிராக நடந்துள்ளது என்று இவர்களால் கூறமுடியுமா? இலங்கையில் உள்ள கட்சிகளுக்குள் முதன் முதலாக தீண்டாமை ஒழிப்புக்காக நூற்றுக்கணக்கான ஆலயங்களையும் தேனீர்க்கடைகளையும் திறந்துமக்களிடத்தில் தீவிர பிரச்சாரம்

துன்னாலை
'தமிழ்ச் செல்வன்'

செய்து விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி சிறுபான்மைத் தமிழரின் பொருளாதார முன்னேற்றத்திற்காக பல உதவிகளைச் செய்து அவர்களின் அடிமைத்தளையை அறுத்தெறிந்த கட்சி தமிழரசுக் கட்சி என்பது பொது மக்களுக்கு நன்ருகத் தெரியும்.

இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த கடந்த மூன்று வருடங்களில் சிறுபான்மைத் தமிழினத்துக்கு என்ன சாதித்தது என்பதைக் கூற முடியுமா? பிரித்தாளும் சூழ்ச்சியில் இறங்கியிருக்கும் இந்த அரசாங்கம் சிறுபான்மைத் தமிழினத்துக்குவிசேஷ சலுகைகள் செய்து அவர்களை முன்னேற்றுவதாகச் சொல்லி அவர்களைத் தனியினமாகப் பிரித்தார்களே. எங்கே ஒவ்வொரு உத்தியோகங்களிலும் சிறுபான்மைத் தமிழனுக்கு எத்தனை இடம் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை எடுத்துக் காட்ட முடியுமா?

புத்தூர் பஞ்சசீல பாடசாலையில் நமது குழந்தைகளுக்கு ஆரம்ப கல்வி புகட்டும் மொழி சிங்களமாகத் திணித்திருப்பதையும் அங்குள்ள பெற்ருேர் குமுறியதையும் மக்கள் நன்கு அறிவர்.

மரவரி அமைப்பிலிருந்த சீவல் தொழில் தவறனை முறையாக மாற்றி சிறுபான்மைத் தமிழ் மக்களின் வயிற்றில் அடித்தது இந்த அரசாங்கமல்லவா?

தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தைப் பலமுள்ளதாக நிறைவேற்றியிருக்கிறது இந்த அரசாங்கம் என்று முன்பு கூறினுர்கள்; ஆனல் அண்மையில் அதில் குறைபாடுகள் இருப்பதாகவும் அதைத்திருத்துமாறு அரசைக் கோருவதென்றும் தீர்மானித்துள்ளது.

இதிலிருந்துசிறுபான்மைத் தமிழரும் பெரும்பான்மைத் தமிழரும் ஒற்றுமையாக வாழ்வதை சிங்கள அரசாங்கம் விரும்பவில்லை என்பது தெரிகிறது. எம். சி. அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராக வருவதற்கு முன் மகாசபை மூலம் சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கு செய்தசேவைபாராளுமன்ற உறுப்பினரானபின் செய்ய முடியவில்லை என்று எம். சி. அவர்களே கூறியிருக்கிருர்.

ஆகவே நாம் கூறுகின்ருேம்—சிறுபான்மைத்தமிழினத்துக்காக இந்த அரசாங்கம் செய்யும் ஒவ்வொரு சிறுசிறு சலுகையும் சிறுபான்மைத் தமிழர் மீது கொண்ட பற்றினல் அல்ல. தமிழினத்தை அழித்தொழிக்கச் செய்யும் பிரித்தாளும் சூழ்ச்சியேயாகும். எனவே இந்நாட்டில் தமிழினம் அழிந்து போவதை இவர்கள் விரும்புகிருர்களா? இந்த அரசாங்கம் அவர்களை ஒரு கைப்பொம்மையாகப் பாவிக்கின்றது. அதற்கு அவர்கள் இடம் கொடுக்க வேண்டாம் என்றுதான் கேட்டுக்கொள்கிறோம்.

நல்ல மரமென்று நினைத்துக்கொண்டு ஒரு பட்ட மரத்தைப் பிடித்துக்கொண்டிருக்கிருர்கள்—அது நன்ருக உக்கிவிழும்போது அவர்களும் சேர்ந்துதான் விழுவார்கள் என்பதை விரைவில் அவர்களுக்கு காலம் பதில் சொல்லும். அதன் பின்பாவது அவர்கள் உண்மையை அறிந்து கொள்ளட்டும்.

## தி. மு. கழகத்தை உருவாக்கிய கேள்விக்குறி!

தி. மு. கழகத்திற்கு விதை ஊன்றப்பட்ட காலம் ஏதோ 1949ம் ஆண்டு என்று சிலர் கருதிக்கொண்டிருக்கிருர்கள். அல்ல நண்பர்களே! அல்ல; தமிழ்ச் சமுதாயம் மறுமலர்ச்சி பெற வேண்டும் என்பதற்காக விதை ஊன்றப்பட்ட காலம் 1949 ஆம் ஆண்டு அல்ல;

அதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்ச் சமுதாயம் விரிவாக வளர வேண்டும்—வீறு கொண்டு வளர வேண்டும்—பாரோர் புகழ வளர வேண்டும். அதனுடைய கலாசாரங்கள் திக்கெட்டும் பரவ வேண்டும்—நம்முடை சரித்திர நாயகர்கள் மீண்டும் தமிழ் மண்ணுக்கு அறிமுகப்படுத்தப்பட்டாக வேண்டும் — நம்முடைய வரலாற்றுக் கருவூலங்கள் மறுபடியும் தமிழ்த் தெருக்களில் அனைவராலும் உணரப்பட்டுப் பாராட்டப்பட வேண்டும் என்கிற அந்த லட்சியத்தோடு இந்த இயக்கம் உருவாக்கப்பட்டது;

நம்முடைய தலைவருக்குத் தலைவராம் பெரியார் அவர்கள் தமிழ்ச் சமுதாயத்தின் விடிவெள்ளியாக அமைத்த பல்வேறு தானைத் தலைவர்கள் எல்லாம் தன்மான இயக்கத்தைத் தமிழகத்தில் வளர்த்த காலம் — பிறகு அது திராவிடர் இயக்கமாக மலர்ந்த காலம் — திராவிடர் கழகமாக உருவெடுத்த காலம் — திராவிட முன்னேற்றக் கழகமாகத் தோன்றிய காலம் — இந்த காலங்கள் எல்லாம் வெறும் அரசியல் புத்தகத்தில் சாதாரண வரிகள் அல்ல;

ஒவ்வொரு எழுத்தும் செந்நீரால் கண்ணீரால் எழுதப்பட்ட எழுத்துக்கள்: அப்படிப்பட்ட எழுத்துக்களைக் கொண்ட புத்தகம்தான் திராவிடர் இயக்க வரலாற்றுப் புத்தகம்;

இன்று சிலருக்கு இது அலட்சியமாகத் தோன்றலாம். இதை வீழ்த்தி விடலாம் என்று சிலர் கருதலாம். நம்மைக் கேலிப் பொருளாகச் சிலர் எண்ணிக் கொண்டிருக்கலாம்.

ஆனல், தி. மு. கழகம் ஏதோ தேர்தலுக்காக அல்லது ஆட்சிப் பீடத்தில் சிலர் அமைச்சர்களாக அமர வேண்டும்என்பதற்காகஉருவாக்கப்பட்ட கழகம் அல்ல; அமைக்கப்பட்ட இயக்கம் அல்ல. இதற்கு என்று சில லட்சியங்கள் உண்டு. அதில் தலையாயது தமிழ்ச் சமுதாயத்தை வாழ வைக்க வேண்டும்; தரணியில் தமிழன் யாருக்கும் தலை வணங்க மாட்டான்; அவன் தலை வணங்குவது மரியாதைக்காக இருக்கலாம். மானம் அழிந்து தமிழன் யாருக்கும் தலைவணங்க மாட்டான் என்கிற வீரக் காவியத்தை உருவாக்குவதற்காக—கொடி கட்டி வாழ்ந்தவன் இன்றைக்கு மடி நீட்டி பிச்சை எடுக்க வேண்டிய அளவிற்கு ஆகி விட்டதே, இந்த நிலைமை மாற்றப்பட வேண்டாமா என்று எழுந்த கேள்விக் குறியின் அடிப்படையில் தான் கழகத்தின் பணிகள் வேகமாக நடை பெறத்தொடங்கியது. இன்றைக்கும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

— கலைஞர் மு. கருணாநிதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவேகானந்த சபை புதிய நிர்வாகிகள்

கொழும்பு விவேகானந்த சபையின் நடப்பாண்டு உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்:

தலைவர்:- திரு. வே. சு. கந்தசாமி. உப தலைவர்கள்:- ஆ. குணநாயகம், சு. சிவசிதம்பரம், க. சிவசுப்பிரமணியம், கா. ஆ. தவத்துரை, அருள் தியாகராசா, ஆ. செ. நடராசா, த. நீதிராசா, கி. லக்ஷ்மணன், பொ. வன்னியசிங்கம். செயலாளர் திரு. மு. சிவராசா. பொருளாளர் திரு. க. இராஜபுவனீஸ்வரன்.

38பேர் முகாமைச் சபை உறுப்பினராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

ஈழம் வாழ் செந்தமிழ் மக்கள் தழுவி நிற்கும் சித்தாந்த செந்நெறியாம் சிவநெறிக்கு வரும் இன்னல்களை தடுத்து நிறுத்த ஈழத்துச் சிவநெறி மன்றங்களில் ஒத்துழைப்புடன் நடவடிக்கை எடுத்தல்.

கோணேசர் கோவிலையும் அதன் சுற்றுடலையும் சைவ மக்களின் புனித இடமாக பிரகடனஞ் செய்ய கட்டளை பிறப்பிக்குமாறு அரசினை வேண்டுதல்.

சைவ சமய பாடத்தோடு ஏனைய மதங்களைப் பயிற்றுவிக்க எடுக்கும் முயற்சிகளை உடனடியாகக் கைவிடுமாறு அரசாங்கத்தை வேண்டுதல்.

செந்தமிழ் இளைஞரிடையே சிவநெறிப் பற்றினை வளர்ப்பதற்கு இறை வழிபாட்டினை இன்பத் தமிழிலும் அமைத்து அன்பைப் பெருக்க சிவநெறி மன்றங்கள் செயற்பட வேண்டுதல்.

மகா சிவராத்திரி தினத்தையும், அதற்கடுத்த நாளையும் பொது வர்த்தக விடுமுறை நாளாகப் பிரகடனஞ் செய்யும்படி அரசைவேண்டுதல்.

ஆகியவை பற்றி ஐந்து பிரேரணைகளும் சபையில் நிறைவேற்றப்பட்டன.

—

## அம்பாரை மாவட்ட தமிழ் இளைஞர் பேரவை

சென்ற 2-6-73இல் தம்பிலுவில் கண்ணகை ஆலய முன்றலில் தமிழர் கூட்டணி தம்பிலுவில் கிளையின் முன்னிலையில் நடைபெற்ற அம்பாரை மாவட்டத் தமிழ் இளைஞர் பேரவை தம்பிலுவில் அங்குராற்பணக்கூட்டத்தில் தலைவராக சோமசுந்தரம் தவராசாவும் காரியதரிசியாக அரியநாயகம் மேகனதனும் பொருளாளராக பேரம்பலம் ஜெகதீஸ்வரனும் ஏறக்குறைய 125 அங்கத்தவர்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்டனர்.

தொடர்கதை




## அத்தியாயம் (16)

ஒழுக்கம் பற்றிய விவாதம் இன்று பல்வேறுபட்ட கருத்துக்களைக் கொண்டதாக, பலராலும் பலவிதமாகப் பேசப்படுகின்றது. எங்கள் சமுதாயத்தைப் பொறுத்தமட்டில் இவ்விதப் பண்பாடு பெண்களுக்கு மட்டுமே உரிய ஒன்ருகப் பெரும்பாலானோர் கருதுகின்ருர்களேயன்றி, எல்லோரும் ஒழுக்கமானவர்களாக வாழவேண்டும் என்ற அடிப்படை நோக்கம் எவருக்குமே இருப்பதாகத் தெரியவில்லை. மேலை நாட்டு நாகரீகத்தை அப்படியே நம்முடையதாக்கிங் கொள்ள இருபாலாரும் விரும்புகின்ற போதிலும், பெண்ணினத்துக்கு மட்டும் ஒழுக்கம், கற்பு என்ற ஒரு தனித்துவத்தினை ஆண்கள் வலியுறுத்துகின்றனர்.

மேலை நாட்டு நாகரீகத்தில் இப்படிப்பட்ட ஒன்றுக்கே பெரும்பாலும் இடம் இல்லை என்பதை அறியாதவர்களும் அறிந்திருப்பவர்களும் அது பற்றி எதுவும் தெரியாதவர்கள் போன்று பாசாங்கு செய்கிருர்கள். இதனை உணர்ந்தோ என்னவோ பெண்கள் துணிந்து முன்னேறுகின்றனர். எந்த வழியில் முன்னேறுகின்றனர் என்ற ஆராய்ச்சிக்கு இடமில்லாத வகையில் ஆண்களை ஏமாற்றும் வழிக்கு என்று திடீரெனக் கூறிவிடலாம்.

ஆனல் ராதா எழுதிய கடிதத்தைப் படித்த சுரேஷ் குமார் அவள் எப்படிப்பட்டவளானலும் அவளை அடைந்தே தீருவது என்று உறுதி பூண்டவனய் அவள் கடிதத்தை மீண்டும் படிக்கலானன்.

'மிஸ்டர் சுரேஸ்'

'அன்று உங்களை அவமதித்து விட்டதாக நீங்கள் நினைக்க மாட்டீர்கள் என நான் நம்புகின்றேன். நீங்கள் மன்னிப்புக் கேட்ட பொழுதே பெருந்தன்மையுள்ளவர் என்று எண்ணிக் கொண்டேன். நான் ஒருவரை விரும்புகின்றேன்; என் நெஞ்சில் அவர் நினைவைத் தவிர வேறு எவருக்கும் இடமே இல்லை.

'அவர் உங்களைப் போலப் பணக்காரனில்லை. ஏழை தான். எனினும் அவரையன்றி வேறு எவரையும் என் உள்ளம் ஏற்காது. இதனை வீட்டில் கூறவோ அல்லது அவர்களுடன் சண்டையிடவோ என்னல் முடியாது. அப்பாவுடைய நிலையை உத்தேசித்து என் மனநிலையை உங்களிடம் கூறுகின்றேன்.

'நீங்கள் பணம்படைத்தவர். உங்களுக்கு என்னைப் போல ஆயிரம் பெண்கள் கிடைக்கலாம். ஆனல்...... என்னை நம்பியவருக்கு நான் இல்லையென்ருல் வேறு வாழ்வே இல்லை.

'மிஸ்டர் சுரேஷ்! நீங்கள் மேலை நாடுகளுக்கு அடிக்கடி செல்வதாகவும், அவர்களின் வாழ்க்கை முறை போன்று வாழ்வதாகவும் அறிந்தேன்: என்விடயம் உங்களுக்கு அற்பமாகத் தோன்றினலும் இருவரும் மனது வைத்தால் கட்டிய கணவனையோ மனைவியையோ கைவிட்டு புது வாழ்வு வாழும் நாகரீக மனிதர்கள் அவர்கள். அந் நிலையில் பார்த்தாலும் நான் விரும்பாத அளவில் என்னை நீங்கள் விரும்பமாட்டீர்கள் என்பதினல் எழுதுகின்றேன்:

'என் வாழ்வை நரகமாக்கி விடாதீர்கள். எப்படியும் நீங்களாகவே இந்தத் திருமணத்தை வேண்டாம் என்று சொல்லிவிடுங்கள். என் பலவீனத்தைப் பயன்படுத்தி என்னை அடைய நினைக்கமாட்டீர்கள் என நம்புகின்றேன். இந்த ராதையின் நெஞ்சம் அவர் ஒருவருக்கே சொந்தம் நீங்கள் கூட என்னையே திருமணம் செய்ய விரும்பினலும் என் உடலை அடையலாமேயன்றி என் உள்ளத்தை என்றுமே அடைய முடியாது. இனி இறைவன் விட்ட வழி.'

—என்று கடிதத்தை முடித்திருந்தாள்.

அந்தக் கடிதத்தைப் படித்து முடித்ததும் தம்பாட்டிற்கு வாய்விட்டே சிரித்து விட்டான் சுரேஷ் குமார். அவனுடைய அகராதியில் 'கற்பு' என்ற சொல்லுக்கே கருத்து இருக்கவில்லை. பழைய மனிதர்களுடைய பத்தாம் பசலிக் கொள்கை அது என்று நினைப்பவன்.

இன்றைய நிலையில் எந்தப் பெண் அப்படிப்பட்ட உத்தமியாய் வாழ்கின்ருள்? வெளி உலகிற்கு எல்லோரும் அப்படிச் சொல்லிக்கொள்ள விரும்புகின்ருர்களேயன்றி, ஆபத்து எதுவும் ஏற்படாத வழியில் இன்பம் காண எந்தப் பெண்தான் விரும்ப மாட்டாள்? எந்தப் பெண்ணுக்குத் தான் அப்படிப்பட்ட ஆசை இல்லை? நல்ல பெண் என்ற நினைவுக்கே என் அகராதியில் இடம் இல்லாதபொழுது அவள் யாரைக் காதலித்தால்தான் என்ன? சோரம் போனல் தான் என்ன? அப்படிப்பட்டவளை நிச்சயம் அடைந்தேயாகணும் என்று முடிவு செய்து கொண்டான்.

வாழ்க்கையை ஒரு விளையாட்டுக் கருவியாக நினைக்கின்ருன் சுரேஷ்குமார். விளையாட்டுகளுக்கென கட்டுப்பாடுகள், விதிகள் உண்டு; அவற்றை மீறினல் 'பவுல்' என்று தெரிந்தும் சிலர் அவ் விதிகளை மீறுகின்றனர். அவ் விதிகளுக்கு அடங்கி நடப்பவனைப் பற்றி எவருமே பேசுவதில்லை. அப்படி வாழ்க்கையில் 'பவுல் கேம்' விளையாடி அனுபவப்பட்டவன் சுரேஷ் குமார். அதற்கேற்ற அந்தஸ்தும் அவனுக்கு இருக்கின்றது. இந்த நினைப்புடனே ராதாலட்சுமியுடனும் விளையாட நினைத்தான்——?

திருமணம் நிச்சயமாகி விட்ட பொழுதும்எப்படியும் அது குழம்பிவிடும் என்ற நம்பிக்கை ராதா லட்சுமிக்கு இருந்தது. சுரேஷ் குமார் தன் கடிதத்தைப் பார்த்ததும் தன்னை வெறுத்து விடுவான் என்றே நம்பினள். அவள் மனதில் வாசுவின் நினைவைத் தவிர வேறு எதுவுமே இருக்கவில்லை.

கீழே ஹோலில் பத்திரிகை படித்துக் கொண்டிருந்த சோமசுந்தரம் அதனை மூடி வைத்து விட்டு வானெலிப் பெட்டியைத் திருகினர்; வீணைக் கச்சேரி நடந்து கொண்டிருந்தது. அந்த இசையில் லயித்துப் போயிருந்தார் சோமசுந்தரம்? ராதாலட்சுமி எழுந்து வந்து மாடிப்படிக் கைப்பிடிச் சுவருடன் சாய்ந்து நின்ருள். வீணை இசை முடிந்ததும் இசைத் தட்டுக்கள் ஒலிபரப்பாகின.

'நித்திரை இல்லையடி சகியே நிம்மதியில்லையடி — அந்த உத்தமனை நினைத்தே—மனம் உருகிவாடுதடி.'

என்ற பாடல் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது. ராதா தன்னை மறந்தாள். அன்ெருருநாள் பேராதனையிலுள்ள வீட்டில் வாசுயுடன் இருந்த பொழுது நடைபெற்ற சம்பவங்களுடன் ஒன்றி விட்டாள். அவள் உள்ளம் மட்டுமன்றி உடலும் நிலைகொள்ளாது தவித்தது. அடுத்த கணம் மாடிப்படிகளில் மலர்ப் பந்தெனஉருண்டு விழுந்தாள்.

ஃ

ஈழத்தின் தலைநகரான கொழும்பில் 'ஹோல்பேஸ்' கடற்கரை என்ருல் அங்கு சென்று பார்க்காதவர்களுக்ும் அதன் மகிமை தெரியும். ஆனல் சனசந்தடி மிகுந்த அந்த இடத்துக்கு வாசுதேவன் செல்வதில்லை; மாலைவேளையில் சில சமயங்களில் வெள்ளவத்தைக் கடற்கரைக்குச் செல்வான். கடற்கரையின் வெண்மணற் பரப்பையொட்டிக் கருங்கற் பாறைகளும், அவற்றினிடையே அடர்ந்து வளர்ந்த புதர்களும், அதையடுத்து இருவரிசைப் புகையிரதப் பாதைகளும் அமைந்துள்ள அப்பகுதியிலும் சனசந்தடிக்குக் குறைவிருக்காது:

இடைக்கிடையே இரைந்து கொண்டு செல்லும் ரயில் வண்டிகளைத் தவிர வேறு ஆரவாரமில்லாத அப்பகுதியில் தானும் புதர்களி[illegible]டங்களுடன் தவிக்கும் இளமட்டங்களையும் காணலாம்: இவைகளையெல்லாம் பொருட்படுத்தாது தனிமையில் ஓரிடத்தில் சென்று உட்கார்ந்து கொள்வான் வாசுதேவன். மறுநாள் பரீட்சை முடிவு வெளியாகும் என்று அறிந்ததினல் அதுபற்றிய சிந்தனை அவன் மனதை உறுத்திக்கொண்டிருந்தது.

சமீபத்தில் வெளியான ஒரு வர்த்தமானியில் பட்டதாரிச் சான்றிதழுடன் உயர் பதவி ஒன்றுக்கான விளம்பரம் வெளியிடப்பட்டிருந்தது. அதற்குச் சாதகமாகப் பரீட்சை முடிவு வெளியாவதும், அவனுக்குப் பலவகையிலும் உதவிசெய்யப் பெரியவர்கள் பலர் தயாராக இருப்பதும் அவனுடைய லட்சியங்கள்பூர்த்தியாவதற்கான சந்தர்ப்பத்தைத் தோற்றுவித்திருந்தது. அதனை நினைத்து அதிலேயே உழன்றுகொண்டிருந்தது அவன் சிந்தனை:

அந்த அமைதியை ஊடறுத்துக்கொண்டு தெற்கு நோக்கிச்சென்றது ஒரு ரயில் வண்டி. அந்த இரைச்சல் ஓய்ந்ததும் அவனுக்குச் சமீபத்தில் இருந்த ஒரு குடும்பத்தினர் வைத்திருந்த டிரான்சிஸ்டரிலிருந்து வந்த அந்த இனிய குரல் அவன் சிந்தையைக் கவர்ந்து தடுமாற வைத்தது. இதுவரை நேரமும் தனது லட்சிய நினைவிலேயே அமிழ்ந்து கிடந்தவனது உள்ளத்தை 'ராதையின் நெஞ்சமே கண்ணனுக்குச் சொந்தமே' என்ற வரிகள் ராதாவே மறைந்து நின்று பாடுவது போன்று அவனைத்துடிக்க வைத்தது:

'ராதா! அலையில் தவழ்ந்து வரும் சீதளத்தென்றல் என்னை நீ அணைத்துத் தழுவும் உணர்வையல்லவா நினைவூட்டுகின்றது.' என்று வாய்விட்டே கூறினன்.

'ஹலோ மிஸ்டர் வாசு! என்ன தனிமையில் இனிமை காண்கிறீர்களா?' என்ற இனிய குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினன்; அழகே உருவாய், அம்புலி மாமாக் கதைகளில் வரும் மச்ச கன்னி போன்று நின்றிருந்த அந்தக் கன்னியைப் பார்த்து, 'ஓ...நீங்களா மிஸ்... என்று அவன் இழுத்த பொழுது, 'சியாமா' என்று தன் பெயரைக் கூறினள் வந்தவள்;

'ஏது இந்தப் பக்கமாக?' என்று சம்பந்தமில்லாமல் கேட்டுவிட்டான்.

'இங்கே எதற்காக வருவார்கள்?' அவள் கலகல வெனச் சிரித்தாள்;

'சொறி மிஸ் சியாமா. தனியாகவே வந்தீர்களா?'

'பிரன்ட்ஸ் எல்லாம் வந்திருக்கிருர்கள். நான் தனியாக இந்தப் பக்கம் வந்தேன். உங்களை இங்கே...

'அப்பா சுகமா?'

'வெல். உங்களுக்கு அதிஷ்டம் ஏதோ காத்திருக்காமே நாளைக்கு ரிசல்ட் அவுட்டாகுதாமே.'

'ஆமா'

'அப்பா அதிகமாக என்ன யாருக்குமே இப்படிக் 'ஹெல்ப்' பண்ண முன்வருவதில்லை. அவரை எப்படி உங்கள் கைக்குள் போட்டீர்கள் மிஸ்டர் வாசு.' என்று புன்முறுவல் பூத்தாள்.

புடவை கட்டவேண்டிய வயதில் நவநாகரீகத்தின் சின்னமாய் 'ஜீன்ஸ்'சும் மேல் உடம்போடு ஒட்டிய சட்டையும் அணிந்திருந்தாள். உடலில் சதைப்பிடிப்பான பகுதிகளை எங்களை இனம் தெரிகிறதல்லவா என்னும் பாணியில் முத்திரையிட்டுக் காட்ட, முகத்தின் அழகினைச் சன்கிளாசினல் மறைத்து உதட்டுக்கும் சாயம் தீட்டியிருந்தாள். அவள் உடல் அமைப்பை ஒருகணம் நோட்டம் விட்ட வாசு சிரித்துக்கொண்டே 'என்ன கேட்டீங்க?' என்ருன்.

'எங்கப்பாவை எப்படிக் கைக்குள் போட்டீங்க?'

'மிஸ் சியாமா! உங்கள் அப்பா எனது பிருஞ் மேலதிகாரி. அவர் ஆட்களைப் பார்த்த மாத்திரத்திலேயே எப்படிப்பட்டவர்கள் என்று இனம் கண்டுகொள்ளக்கூடியவர். 'இன்கம்ரக்ஸ்' ஆபீசராக இருந்ததினலோ என்னவோ அவருக்கு அப்படிப்பட்ட சக்தி கிடைத்திருக்கின்றது. ஏன் என்ருல் எத்தனையோ கணக்கு விபரங்களைப் பார்த்து உண்மை பொய் எது என்பதை ஆராய்ந்து இனம் கண்டுபிடித்து வரி போடுபவரல்லவா?' என்ருன்.

அவனுடைய . வேடிக்கையான, ஆனல் உண்மை நிறைந்த அந்தப் பேச்சைக் கேட்டு அவனுடன் தானும் சேர்ந்து சிரித்தாள் சியாமா.

'மிஸ்டர் வாசு! உங்களோடு சில நிமிடம் பேசினலே போதும். உங்களை... அப்பா உங்களிடம் ஏன் இவ்வளவு பிரியம் வைத்திருக்கின்ருர் என்பது புரிகின்றது.' என்ருள்.

'அது மட்டுமல்ல எனது நிலைமை, குடும்ப வரலாறு என்பன பற்றியும் கேட்டார். ஒளிவு மறைவின்றிக் கூறினேன்.

'தெரியும் மிஸ்டர் வாசு.'

'பட்டப்படிப்புப் படித்து விட்டு இதற்குள் ஏன்டா வந்தாய்? உன் படிப்புக்குத் தகுந்த பதவி வெற்றிடம் கிடைத்தால் அப்பிளிக்கேசன் போடு; நான் உதவி செய்கிறேன் என்ருர். நடந்தது இதுதான்.'

'அப்பா உங்களைப் பற்றி அடிக்கடி வீட்டில் கதைப்பார். நீங்கள் இரண்டொரு நாள் வீட்டுக்கும் வந்தீர்கள். நாங்கள் வேற்று மதத்தவர்கள் ஆனலும் அன்பினல் ஒரு இனமாயிட்டோம். மிஸ்டர் வாசு! உங்கள் நல்ல மனதுக்கு நன்மைகள் கிடைக்க கர்த்தர் அருள் புரிவார். என் 'பிரன்ட்ஸ்'

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தமிழ் ஈழம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நாவலர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

''முற்போக்குத் திட்டங்களை செயற்படுத்த இந்த அரசாங்கத்துடன் தமிழர்கள் ஒத்துழைக்கவேண்டும் என்று கூறுபவர்கள் இப்போதும் சிலர் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் தான் ஒற்றுமை பற்றியும் பேசுகிறார்கள்.

''தமிழர்கள் இன்று அதிருப்தியின் எல்லைக் கோட்டுக்கு வந்துவிட்டார்கள். தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் ஆர்வம் கொண்டிருப்பதாக காட்டக்கூடிய ஆக்கபூர்வமான நடவடிக்கை எதுவும் இதுவரை அரசாங்கத்தினால் எடுக்கப்படவில்லை. தமிழ் மக்களின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி தமிழ் இனத்தின் பிரச்சினைகளை தீர்த்துவைப்பதற்கு தாங்கள் தயாராக இருப்பதாக அரசாங்கத்திலுள்ள சில தலைவர்கள் காலத்துக்கு காலம் மேடைகளில் பேசித்திரிந்தார்களேயொழிய, இதுவரை அத்திசையில் அப்படி எந்த ஒரு முயற்சியும் எடுக்கப்படவில்லை.

''தமிழ் மக்களைகேலிசெய்யும் நோக்குடன் காங்கேசன்துறை இடைத் தேர்தல் வேண்டுமென்றே காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுவருகிறது. இந்நிலையில் தமிழர்கள் இந்நாட்டில் சுயமரியாதையுடன் எப்படி வாழமுடியும்?

''இந்நாட்டில் மிளகாய், வெங்காயம் உருளைக்கிழங்கு போன்ற உப உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு — அவற்றை இறக்குமதி செய்ய அந்நிய செலாவணியின்றி அரசாங்கம் திகைத்து நின்றபோது— தமிழர்களே முன்வந்து விவசாயப்புரட்சியில் இறங்கி இந்நாட்டில் பசுமைப்புரட்சியை ஏற்படுத்திவருகிறார்கள்.

''இந்தப் பசுமைப்புரட்சியில் அரசாங்கத்துக்கு உதவும் நோக்குடன் மலையகத்தைச் சேர்ந்த காணியற்ற சில தமிழர்கள், மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள புளுகுணாவையில் குடியேறி விவசாயத்திலீடுபட்டார்கள். இன்று அந்த மக்கள், அரசியல் நோக்கம் கொண்டவர்கள் என்றும், நிலச்சுரண்டல்காரர்கள் என்றும் கள்ளத் தோணிகள் என்றும் குற்றம் சுமத்தப்பட்டு, அரசாங்கத்தினால்விரட்டப்படுகிறார்கள்.

''இப்படி அரசாங்கத்தினால் ஒவ்வொரு திருப்பத்திலும் நசுக்கப்படும் தமிழ் மக்கள், பட்டினிப்பஞ்சத்திலிருந்து இந்நாட்டையும் அரசாங்கத்தையும் காப்பாற்ற வியர்வை சிந்தி தொடர்ந்து உழைக்கத்தான் வேண்டுமா? இதுபற்றி தீவிரமாகச் சிந்தித்து தமிழ் மக்கள் ஒரு தீர்மானத்துக்கு வரவேண்டிய வேளை வந்துவிட்டது!''

## வ.பொ. நிர்வா...

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

விழா நடத்தியது முறையா? ப. நோ. கூட்டுறச் சங்கத்தின் விளம்பரம் போடப்பட்டபின் அதனை மூடியிருக்கச் செய்தது சரியா? உதவி அமைச்சர்கள் பிறகு வரமாட்டார்களா? ஏனிந்த அவசரம்! ஏனிந்த ஏமாற்று வேலை! தடக்கி விழுந்ததையும் கலையாகக் காட்டும் தலைவர் இதற்கும் காரணம் சொல்லுவார். இச் செயலால்தான் பெற்ருேல் நிலையம் சங்கத்தின் கைக்குக் கிடைத்தது என்று கூடக் கதையளப்பார். இவரை உள்ளும் புறமும் கண்டு விட்டோம். இனி ஏமாற்றத்துக்காளாகோம்:

### அளவெட்டி, மல்லாகம் கூட்டுறவாளர்களே!

அளவெட்டி மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் நடைபெறும் குறைகள் இன்னும் பல. அவற்றையெல்லாம் எடுத்துச் சொல்லப்புகுந்தால் இத்துண்டுப்பிரசுரம் ஒரு புத்தகமாக மறிவிடும். இயக்குனர் சபைக்கு அங்கத்தவர்கள் நியமனம், புதிய கிளை நிலையங்கள் திறந்தமை. ஊழியர்தெரிவு, ஊழியர்கள் பதவி உயர்வு முதலாய பலப்பல உபதலையங்கங்களில் ஆராயவேண்டி நேரிடும். அவ்வாறு ஆராயவேண்டிய சந்தர்ப்பத்தைத் தலைவர் எமக்குத்தராமல் பொறுப்புணர்ச்சியுடன் நடப்பாரென எதிர்பார்க்கிறேம்.

இச்சங்கம் லாபமடைகிறது — நட்டமடைகிறது என்பதில் மட்டும் அதன் நிர்வாகச் சிறப்பும் இழிவும் தங்கியிருக்கவில்லை, நேர்மையாக—உண்மையாக— பாரபட்சம் அற்ற முறையில் நடைபெறுகிறதா என்பதே கேள்வி. இந்த உயர்ந்த நிலையைத் தோற்றுவிக்க நீதிமன்றம் செல்லவேண்டி நேர்ந்தாலும் பொது மக்களாகிய நீங்கள் தயாராக இருப்பீர்கள் என்னும் துணிபு உடையோம்.

இங்ஙனம்,

அளவெட்டி மல்லாகம் ப. நோ. கூ. சங்க அங்கத்தினர்.

த. சிவலிங்கம்,
ச. இராசையா,
கா. பொன்னுத்துரை,
நா. செல்லத்துரை,
இ. கந்தையா,
சு. பத்மநாதன்.

அளவெட்டி, 19-6-73.

---

### நெடுந்திவு சமூக முன்னேற்றச் சங்கம் 13ம் ஆண்டு நிர்வாகிகள்

தலைவர்...திரு. எல். பி. சின்னராசா. உபதலைவர்... திரு சி. கணபதிப்பிள்ளை பொதுச்செயலாளர் திரு. சு. கணபதிப்பிள்ளை. உபசெயலாளர் ... திரு. அ. பேதுறுப்பிள்ளை பொருளாளர்... திரு. ரி. மரியாம்பிள்ளை உபபொருளாளர் திரு. க. கோபால் கணக்குப் பரிசோதகர் திரு. ஞா. பிலேந்திரன் நிர்வாக சபை உறுப்பினர்கள் திரு. மோ. பக்கரியாஸ், திரு. ச. அருளப்பு, திரு. சு. பாக்கியநாதன், திரு. நீ. கிறீஸ் தோப்பர்

## வினவுக்கு விடை!

'சகோதர மொழியான சிங்களத்தை கற்பதில் என்ன தவறு? —யாழ் மேயர் —

(வீரகேசரி 20-6-73)

—சகோதர மொழியான தமிழ்மொழிக்குச் சம அந்தஸ்துத் தருவதற்கு ஏன் இந்த அரசு தயங்குகிறது?

'தமிழுக்குச் சம அந்தஸ்து தாருங்கள்' என்று கேட்பதற்கு ஏன் இந்த அரசின் தமிழ் 'அடிமைகள்'. தயங்குகிறார்கள்?

இலங்கையில் இந்து, இஸ்லாம், கிறீஸ்தவம், கத்தோலிக்கம் போன்ற பல சகோதர மதங்கள் இருந்திடவும், பௌத்த மதத்தினை மாத்திரம் ஏன் அரசமதமாக்கி உள்ளது இந்த அரசு?

இப்படியாகத் தமிழ் மக்கள் கேட்கிறார்கள். இதற்கு இந்த மேயர் என்ன கூறுவாரோ?

''கடுகு'

---

## மே 22

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

—இவ்வாறு காணி அமைச்சர் திரு. ஹெக்டர்கொப்பேகடுவ தலவாக்கொல்லை தெவன்தோட்டம் சுவீகரிப்பு விழாவில் பேசும்போது தமது உள்ளத்திலிருந்து உண்மையை கக்கியிருக்கிறார். அவர் தொடர்ந்து பேசுகையில்:-

'அந்நியர்களின் சுரண்டலின் பின்னர் தொண்டமானும் அண்ணாமலையும் எம்மை ஆட்டி வைக்க முயல்கிறார்கள். அவர்களின் ஆட்டத்திற்கு நாம் ஆடப்போவதில்லை. தொண்டமானின் யுகம் மங்கி வருகிறது. இதற்கு உதாரணமாகநாம் அவரது தோட்டங்களையே சுவீகரித்து விட்டோம்'

என்று இனத்துவேஷத்தை கக்கியுள்ளார் காணி அமைச்சர். இக்கூட்டத்தில் திரு. மொன்டி கோபல்லவா பேசுகையில்,

''சுவீகரிக்கப்படும் காணிகளில் ஓர் அங்குல நிலம் தானும் உரிமையாளர்களுக்கு வழங்கப்படக் கூடாது; தோட்டங்களில் தமிழர்கள் மாத்திரம்தான் தொழில் செய்ய முடியும் என்று நினைப்பது தவறு. சிங்கள மக்களும் தொழில் செய்ய ஆயுத்தமாக இருக்கிறார்கள் எனவே எமது நாட்டிலுள்ள சகலதோட்டங்களையும் சுவீகரித்து சிங்களவர்களுக்கு பகிர்ந்தளிப்போம்''

என்று கூறியுள்ளார்!

---

## தமிழர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்பட வேண்டுமென்றும் — தமிழர் கூட்டணி தனது ஆறு அம்சக்கோரிக்கையில் வலியுறுத்தி வருவது தெரிந்ததே.

இக்கோரிக்கைகளுக்கு அமைவாக இவற்றை வலியுறுத்தி அரசாங்க லிகிதர் சேவைச் சங்கத்தின் யாழ்ப்பாணக்கிளையும் அண்மையில் ஓர் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது.

அரசாங்க லிகிதர் சேவைச் சங்கம் இடது சாரிகளின் கட்டுப்பாட்டிலுள்ளது என்பதை

## முத்தொள்ளாயிரத்தில் தமிழர் பண்பாட்டுக்கு இழுக்கு!

சங்க இலக்கியத்தில் ஒன்ருன முத்தொள்ளாயிரம் படிப்பதற்கு இனிமையாக இருக்கின்றது. ஆனல் அது தமிழ்பண்பாட்டைக்குறைப்பதாக நான் உணர்கிறேன்.

ஒரு பாடலில் பாண்டிய மன்னன் யானை மீது ஊர்வலமாக வருகின்ருன், அவனை ஊர்ப்பொது மக்கள் பார்க்கிருர்கள். அவன் அழகாக விளங்குகிருன். அந்த அழகை ரசிக்கிருர்கள்—ஆண்கள் மட்டுமல்ல. ஊர்ப் பெண்கள் எல்லாம் அந்த மன்னன் மீது காதல் கொள்ளும் அளவுக்கு அவன் அழகை ரசிக்கிருர்கள்.

கற்புக்குப் பெருமை சேர்க்கும் தமிழ்நாட்டில் இவ்வாறு பெண்கள் மன்னனுக இருந்தாலும், அந்நியன் ஒருவன் அழகை ரசிப்பார்களா? அவன் மீது மையல் கொள்வார்களா? இப்படி அந்தப் பாடல் இருக்கிறது. இது தமிழ்ப் பண்பாட்டை கேலிபுரிவதாக இல்லையா?

நெடுநல் வேல் மாறன் பெருயானை மீது ஏறி ஊர்வலமாகச் செல்கிருன். அந்த யானை வேகமாகச் செல்கிறது. அப்படி வேகமாகச் செல்லும் யானையைத் தொடர்ந்து பெண்கள் ஓடுகிருர்கள். இது தமிழ்ப் பண்பாட்டுக்கு இழுக்கல்லவா?

ஆகவே முத்தொள்ளாயிரம் பாடலின் அழகை ரசிக்கலாம். பண்பாட்டை ஒப்புக்கொள்ளமுடியுமா?

—முதல்வர் டாக்டர் கருணாநிதி.

## பொலிசார்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூடாதென்பதில் கவனம் செலுத்திய பொலிசார் பொலிஸ் வான் ஒன்றையும் இரண்டு ஜீப்புக்களையும் குறுக்கே தமிழர் கூட்டணி பா. உ. க்களை மறைத்து நிறுத்திவைத்திருந்தனர்.

கைதடி ஆஸ்பத்திரியை திறந்து வைக்க அமைச்சர் வந்து சேர்ந்தபோது ஆஸ்பத்திரிக்கு எதிரில் உள்ள வளவுக்குள் நின்றபடி பண்டிதர் கா. பொ. இரத்தினம், திரு. வி. தர்மலிங்கம், திரு. வி. என். நவரத்தினம் ஆகியோர் அமைச்சருக்கு கறுப்புக்கொடி காட்டி எதிர்ப்புக் கோஷம் எழுப்ப — ஆயுதம் தாங்கிய பொலிசாரால் தூரத்தில் தடுத்து நிறுத்தப்பட்டிருந்த நூற்றுக்கணக்கான கூட்டணித் தொண்டர்கள் அங்கு நின்றபடியே எதிர்ப்புக்கோஷம் எழுப்பினர்

இதன் பின்னர் ஆஸ்பத்திரியை திறந்துவைத்து விட்டு அமைச்சர் வெளியே வந்தபோது—எதிரே வந்த பஸ் ஒன்றுக்குள் இருந்த இளைஞர்கள் பலர் கறுப்புக் கொடிகளை வெளியே வீசி எதிர்ப்புக் கோஷங்களை எழுப்பினுர்கள்.

எதிர்பாராமல் திடீரென நடைபெற்ற இச்சம்பவத்தை கண்ட பொலிசார் ஆத்திரமடைந்து அந்தப் பஸ்சுக்குள் இருந்தவர்களை வெளியே இழுத்து தாக்கியதுடன் அந்தப் பஸ்சுக்குள் இருந்த தமிழ் இளைஞர் பேரவை அமைப்பாளர் புஷ்பராசா உட்பட ஆறு இளைஞர்களைக் கைதுசெய்து கொண்டு சென்றனர்.

மறுநாள் இந்த இளைஞர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

## முஸ்லிம் கடிதம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

களுக்காக மட்டும்' அல்லவா ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது?

இவ்வாருன நிலையில் சிங்களப் பிரதேசங்களில் வாழும் 70% மான முஸ்லிம்களும் துரத்தப்பட்டால் அவர்கள் எங்கே அடைக்கலம் புகுவார்கள்? வடக்கு கிழக்கு மாகாணங்கள் இவர்களை ஏற்றுக்கொள்ளுமா? எனவேதான் திரிசங்கு சொர்க்க நிலையில் வாழும் 70%மான முஸ்லிம்களின் நலன் கருதி சிங்கள மக்களுடன் ஒற்றுமையாக, வெறுப்பை வெளியில் காட்டிக்கொள்ளாமல் வாழவேண்டியது அவசியமும் அவசரமுமாகும்.

ஆனல் அதே வேளையில் அன்னைத் தமிழ் மொழிக்கு எங்காவது ஆபத்து ஏற்பட்டால், அதைஎதிர்த்துநடைபெறும் போராட்டத்தில் முஸ்லிம்களின் பங்கும் நிச்சயம் இருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை;

இலங்கை வாழ் முஸ்லிம்களின் தாய்மொழி இன்பத் தமிழ் மொழியே. தாய்மொழியாக மட்டும் இராமல் சிங்களப் பிரதேசங்களில் வாழும் முஸ்லிம்களின் வீட்டுமொழியும் தமிழே. ஏன் முஸ்லிம் பிள்ளைகளின் போதனுமொழி கூட செந்தமிழ் மொழியே முஸ்லிம்கள் தங்கள் உயிரை விடவும் சித்தமாயிருப்பார்களே தவிர ஒரு போதும் சிங்களமொழியை தாய்மொழியாகவோ, அன்றிப் போதனுமொழியாகவோ ஏற்றுக்கொள்ளவே மாட்டார்கள்.


### பிராணுயாமம்

''பிண்டத் துள்ள பிராண னடக்கி
அண்டத் துள்ள தனைத்தும் வெல்க.''

—ஸ்வாமி ஸத்சிதானந்தா.

15 மில்க்வைற் நிலசோப் மேலுறைகளை அனுப்பி பிராணுயாமம் என்ற புத்தகத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**மில்க் வைற் சோப் தொழிற்சாலை**
**த. பெ. இல. — 77, யாழ்ப்பாணம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னைத் தமிழ் ஏற்றம்பெற ஐம்பதாண்டுப்பணி தேவை

## காலம் தந்த வாய்ப்பைப் பயன்படுத்தி இழந்த பழம் புகழை மீட்போம்!

### பேரறிஞர் அண்ணா

தரணிபுகழ வாழ்ந்திருந்த புகழ் பெற்றது தமிழ் மரபு! மற்ற நாடுகள் எல்லைகளை ஏற்படுத்துவதற்கு முன்பு, எல்லையில் ஏற்படும் தொல்லைகளை நீக்கியதற்கும் முன்பு—அவர்களால் அரசு என்ற ஒன்று ஏற்படுத்தாதற்கு முன்பு—அரச நீதிகளை வகுப்பதற்கு முன்பு — காடுகளில் அவர்கள் உலவிக் கொண்டிருந்த போது உலகமே வியந்து உச்சிமேல் வைத்து மெச்சத் தக்க அரசியல் நெறிபெற்றுத் திகழ்ந்தது தமிழகம்!

நமது மூதாதையர் யவனம் வரை தொடர்பு கொண்டிருந்தனர். நமது மூதாதையர் சீனம்வரை சென்று திரும்பினர். தூரக் கிழக்கு நாடுகளில் கலாச்சார தொடர்பு கொண்டிருந்தனர்.

இரண்டு ஆண்டுகட்கு முன்பு தம்பி செழியனுடன் மலேசியா நாடு சென்றிருந்த போது கடாரம் என்று அழைக்கப்பட்ட ஊருக்குச் சென்றோம்.

இப்போது அது 'கெட்டா' மாகாணம் என்று அழைக்கப்படுகிறது. அங்கே சோழ நாட்டின் மண்டபங்களையும் கோவில்களையும் — பல நூற்றுண்டுகட்கு முன்பிருந்த சிற்பங்களையும் கண்டேன். அது முன்பு மண் மேடாகிக் கிடந்தது. இப்போது அகழ்ந்தெடுக்கப்பட்டு — கண்காட்சிக்காக வைக்கப்பட்டிருக்கிறது.

அந்த ஊரில் உள்ள இடவில் நான் பேச எழுந்த போது பத்து நிமிடம் என்னால் பேச முடியவில்லை.

கடல் கொந்தளித்துக் கொண்டிருந்த அந்தக் காலத்தில்—கடலைக் கடந்து செல்லும் கலங்கள் நேர்த்தியாக அமைக்கப்படாத அந்தக் காலத்தில் — நீராவிக் கப்பல்கள் இல்லாத அந்தக் காலத்தில் — ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பால் — கடாரம் சென்று பெருமையை நிலை நாட்டியது தமிழகம்!

அதே தமிழ் இனத்தைச் சேர்ந்தவர்கள் — தேயிலைத் தோட்டத்திலும் ரப்பர் காடுகளிலும் கூலிகளாய் இருக்கும் நிலையை நினைத்ததும் அந்த பெருமை மிக்கத் தமிழ் மரபிலா நாம் பிறந்தோம் என்று எண்ணினேன் பத்து நிமிடம் பேச முடியவில்லை......

தமிழ் மக்கள் தமிழ் மரபைப் புரிந்து கொண்டு; தமிழ் வரலாற்றைப் புரிந்து கொண்டு; புதுவரலாற்றை; புதிய செய்தியை; புதிய பண்பை உலகிற்கு வழங்க வேண்டுமென்பதற்குத்தான் நாம் பணியாற்றுகிறோம்.

ஐ. நா. சபை என்று உலகத்திலுள்ள நாடுகளையெல்லாம் ஒன்று சேர்த்து எல்லாக் கொடிகளையும் பறக்க விட்ட பிறகும் சர்வதேச ஒற்றுமையை சில நேரங்களில் காண முடியாமல் நாம் தத்தளிக்கிறோம்.

ஆனால், அந்த உலக ஒருமைப்பட்டை ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பு 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்றதோர் கருத்தைத் தமிழ் மரபு தந்தது.

அது மட்டுமல்ல, ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று தமிழர்கள் தரணி ஆண்ட காலத்திலேயே தமிழகம் கூறியது.

இவை போன்ற கருத்துக்களை பண்புகளை மீண்டும் தமிழகம் உலகுக்குத் தர வேண்டும்.

அப்போதுதான் தமிழினம் தலைநிமிர்ந்து வாழும்; புதிய வரலாற்றை புதிய அத்தியாயத்தைச் சமைக்கும்.

அவ்விதம் சமைக்கத் தக்கவாறு தமிழினத்தை ஆக்கும் பொறுப்பு — காலத்தின் கரத்தாலே நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இந்தத் தமிழ் மரபு வளர்வதற்கு இடையூறாக ஆட்சியாளர் குறுக்கிடுவதால் தான் நாங்கள் அரசியலிலே ஈடுபடுகிறோம்.

ஆட்சிப் பொறுப்பிலே இருப்பவர்கள் தமிழ் மரபை அழிக்கத் துணிவதால்—ஆட்சிப் பொறுப்பிலே தமிழ் மரபு காப்போர் அமரவேண்டுமென்பதற்காகத்தான் தி. மு. கழகம் ஆட்சியில் அமர வேண்டும் என்கிறோம்!—

—அந்த உன்னதமான தமிழ் மரபுக்கு ஏற்ற வகையில் நம்மைத் தயார்படுத்திக்கொள்ள — குறைந்த அளவு 50 ஆண்டுகளாவது ஆக்கும்.

"இன்னும் நமது மொழியை இலக்கியச் செறிவுளதாக ஆக்கி—நமது பொருளாதாரத்தைச் சீராக்கி -உரிமைகளை நிலைநாட்டி—இந்தநாட்டுத் தமிழர்களை தமிழ்ப்பரம்பரைக்குச் சொந்தக்காரர்களாக்க இன்னும் 50 ஆண்டுகளாவது ஆகும்!

'வெறும்அரசியல்,நடத்த 67-ல் ஆட்சி அமைக்க மட்டும் நமது கட்சி இருக்கிறது என்று நினைக்காமல்— 67-க்குப் பிறகும் தொடர்ந்து 50 ஆண்டுக் காலத்திற்காவது நமது பணி இருக்கிறது — என்ற கடமை உணர்ச்சி நம் மனதில் ஆழப்பதிய வேண்டும்!'

(—1967ல்சென்னை விருகம்பாக்கம் தி. மு. க. மாநாட்டில் பேரறிஞர் அண்ணா ஆற்றிய உரையின் ஓர் பகுதி.)

## ராதையின்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

எல்லாம் வாராங்க. நான் வரட்டுமா?' என்று விடை பெற்றுப் புறப்பட்டாள்.

கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று நாகரீகத்தில் மோகம் கொண்டவளாகக் காணப்பட்டாலும், ஓரளவு பண்பாட்டுக்குக் கட்டுப்பட்ட ஒழுக்கமுள்ள பிள்ளையாக இருந்தாள். உடை அலங்காரத்தினை வைத்து ஒருவருடைய ஒழுக்கத்தினை எடைபோட முடியாது என்பதற்கு அவளே சாட்சியாகக்காணப்பட்டாள்.

அவள் சென்று சில நிமிடங்கள் தானிருக்கும். அவனுடைய கல்லூரி நண்பனொருவன் யாரோ ஒரு பெண்ணையும் கூட்டிக்கொண்டு அந்தப் பக்கமாக வந்தவன் வாசுதேவனைப் பார்த்துவிட்டான்.

'வாசு! என்னடா தனியாய்?' என்றவன், அவனுக்குச் சமீபமாகச் சென்று, 'உனக்கு விஷயம் தெரியுமா?' என்றான்.

'என்னடா?என்னவென்று கூறேன்' என்றான் வாசுதேவன்.

நண்பன் கூறிய பதிலால் பேயறைந்தவன் போல இடிந்துபோய் இருந்தான் வாசுதேவன்.




# திராவிட மூளையில் தெரிந்தெடுத்தபடைப்பு சைவசித்தாந்தம் என்கிறார் ஈழவேந்தன்

கொழும்பு வெள்ளவத்தையிலுள்ள— (சே)வகெற்றுவிலுள்ள இலங்கா மாதா வித்தியாலயம் 15-6-73 இல் தனது கலைவிழாவினை மிகச் சிறப்பாகக்கொண்டாடியது. இவ்விழாவிற்குக் கொழும்பு விவேகானந்த சபையின் சார்பிற் கலந்துகொண்ட திரு. ஈழவேந்தன் அவர்கள் தலைமை தாங்கி 'தமிழனின் சமயம்' எனும் தலைப்பில் தனது தலைமையுரையை நிகழ்த்தினார்.

அவர் தன் உரையில் 'தமிழர்கள் இன்று பல சமயங்களைத் தழுவி நிற்பினும் ஆதியில் தமிழன் தழுவிநின்ற சமயம் சிவத்தை முழுமுதற் பொருளாகக்கொண்ட சிவநெறியே என்றும் இச்சிவநெறியின் கோட்பாடு சைவ சித்தாந்த மெய் விளக்கத்தில் அடங்கியுள்ளதென்றும் கூறினார். வேதத்தின் அந்தத்தை—மறையின் முடிவை வேதாந்தம் எடுத்து விளங்கி நிற்கையில் சித்தாந்தம் சித்தத்தின் அந்தத்தை அதாவது உள்ளத்தின் முடிவை எடுத்து உணர்த்துகிறது என்று கூறினார்.

வேதத்தின் விழுப்பொருளை வேதாந்தம் விளக்கி நிற்க இறைவன் இன்னுயிர், உலகம் ஆகியவற்றின் இயல்புகளை மிக நுணுக்கமாக சித்தாந்தம் ஆராய்கிறது என்றார். அதனாற்றான் 'திராவிட மூளையின் தெரிந்தெடுத்த படைப்பு சைவ சித்தாந்தம்' (Saiva siddhantha Philosophy in the choicest Product of the Dravidian Intellect) என்று டாக்டர் போப்பையர் புகழ் உரை வழங்கினார் என்றார்.

தென்னக மக்களின் குறிப்பாகத் தமிழ் மக்களின் நுண்மை மிக்க சிந்தனை வளத்தில் உருவாகிய சைவ சித்தாந்தத்தின் தனிச் சிறப்பினை உணரத் தமிழில் எழுந்த சித்தாந்த நூல்களையே யாம் நாட வேண்டுமென்று கூறிய ஈழவேந்தன் அவர்கள் மறைமலையடிகளின் நூல்களிலிருந்து மேற்கோள் காட்டி தன் கருத்தினை விளக்கினார்.

திருவள்ளுவரின் திருக்குறளே தமிழர் மறையென்று கூறிய ஈழவேந்தன் அதில் ஊற்றெடுத்த இனிய நல் ஆகமமே திருமூலர் திருமந்திரம் என்றார். வேறு சொற்களில் விளம்பின் திருக்குறள் என்ற தமிழ் மறையே ஆவாசப்-பசுவாக விளங்க அதில் ஊற்றெடுத்த பாலாகத் திருமூலர் திருமந்திரம் விளங்குகிறது என்று கூறிய அவர் "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்று திருக்குறள் உலகிற்கு உணர்த்தி நிற்கும் உயர் தத்துவத்தை — "ஒன்றே குலம் ஒருவனே தேவன்"— என்ற உலகளாவிய கொள்கையை — திருமூலர் திருமந்திரம் திறம்பட எடுத்து இயம்புகின்றது என்றும் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் உலகெலாம் உணர்ந்து ஓதற்கரிய ஒப்பற்ற இறைவன் தன்னைப் படைத்த நோக்கத்தை விளங்கவைக்க முற்பட்டு "என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே" என்று எதுவித ஐயமும் இன்றி எடுத்துரைத்ததன் வாயிலாகத் "தமிழ் மந்திரம்" ஓதியே இறைவனை வழிபட்டுப் பயன் பெற வேண்டும் என்ற இனிய — நமது பகுத்தறிவுக்கு ஏற்ற கருத்தினை திருமூலர் தெரிவித்துள்ளார் என்றார்.

அவர் மேலும் கூறுகையில் திருமூலர் திருமந்திரம் என்ற பாலிற் கடைந்தெடுத்த நெய்யாகவே ஆளுடை அரசர், ஆளுடைப் பிள்ளை, ஆருடை நம்பி, ஆளுடை அடியார் ஆகிய நால்வரின் நற்றமிழ்ப் பாக்கள் இறையுணர்வு மிளிரும் இன் தமிழ்ப் பாக்களாக மிளிர்கின்றன என்றார்.

அவர் தனது பேச்சின் இறுதியில் மொகஞ்சதரோ ஹப்பா அகழ் ஆய்வுகள் எடுத்து உணர்த்துவதற்குரிய மிகமிகத் தொன்மை நெறியாக விளங்கும் எம் சைவ சித்தாந்தம் (Sir Monier Williams) சேர். மொனியர் வில்லியம்ஸ் சின் கூற்றிற்கு அமைய எல்லாச் சமயங்களையும் ஏற்ற பெற்றி இசைந்து ஏற்பது, எதனையும் இகழ்ந்து ஒதுக்காமல் இனிது அணைத்தும் தன்னுட் பொதிந்து கொள்வது, உலகமுழுவதற்கும் ஏற்புடைய மனித குலச்சமயமாகத் திகழ்வது; வேறு பிற எந்தச் சமயத்தின் வளர்ச்சியையும் அது எதிர்க்கக் கருதவில்லை. ஏனெனிற் பிற எல்லாச் சமயங்களையும் தன்னுடன் அணைந்து தழுவிப் போற்றிக் கொள்வதில் அதற்கு இடர்பாடு ஏதும் இல்லை. ஒவ்வொருவருடைய உள்ளத்திற்கும் நிறைவு அளிக்கத்தக்க வகையில் அது சால்பு மிக்க விளங்குகின்றது. பல்வேறுமனித இயல்புக்கும் — ஒழுக்கத்திற்கு ஏற்ற வகையில் சைவ சித்தாந்தம் தன்னை ஆக்கிக் கொள்வதாக உள்ளது. நுண்பொருட் தத்துவ அறிஞர்களுக்கு உரிய ஆன்மீக அருவக் கூறும், கவிதை உணர்வும், கற்பனைத் திறனும், மிக்கவர்களுக்குரிய நடைமுறைப் பருவடிவக்கூறும், அமைதியை நாடும் தனிமை விரும்பிகளுக்குரிய சாந்தி நலம் மிக்க சிந்தனைக்கூறும் ஒன்றுசேர வாய்ந்ததாகத் தலைசிறந்து விளங்குகின்றது என்று கூறி முடித்தார்.

இவ்விழாவில் திரு. நா. முத்தையா — திருமலைத் தம்பி—திரு. வ. முருகவேல் —திரு. வ. ஜெயராஜசிங்கம் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். திரு. நா. முத்தையா அவர்களின் குத்துவிளக்கு ஏற்றலுடனும் இலங்கை மகா வித்தியாலய முதல்வர் செல்வி அம்பிகை வைத்திலிங்கம் அவர்களின் வரவேற்புடனும் தொடங்கிய இவ்விழா பல கலை நிகழ்ச்சிகளுடன் நிறைவு எய்தியது.

—

## புதிய நிர்வாகிகள்

கொழும்பு மாநகர சபை இந்து ஊழியர் கலாச்சார சங்கத்தின் நடப்பு ஆண்டு உத்தியோகத்தர்களாக பின் வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்:-

தலைவர்: பொ. சபாரத்தினம் உபதலைவர்கள்: ஈ. மகேசன், எஸ். சிவனடியான், வி. கந்தசாமி, எஸ். குலசிங்கம், எஸ். இராசசுந்தரம், செல்வி. ய. சு. வைத்தியலிங்கம். செயலாளர்: த. லோகநாதபிள்ளை உபசெயலாளர்: சி. வேலுப்பிள்ளை பொருளாளர்: சிறுப்பர்: கே. இராசரத்தினம் உபபொருளாளர்: ஆ. மாசிலாமணி நூலகப்பொறுப்பாளர்: எஸ். தருமராசா கணக்காய்வாளர்: சி. சுப்பிரமணியம், எஸ். சி. விவேகானந்தராசா. பொதுச் சபை உறுப்பினர்கள்:- ஆர் கனகசபாபதி. எஸ். பி. சோமசுந்தரம் ஏ. ஜே. பொன்னுக்கோன், செல்வன். பாஸ்கரன், என். நமசிவாயம், செல்வி. ஜே. வேதநாயகம், சு. கந்தசாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வ. பொ. நிர்வாகத்தில் ஊழல், ஒழுங்கீனம்!

## ஏழு கடல் நீரில் கழுவினாலும் கறைபடிந்தகரம் சுத்தமாகாது!

திரு. வி. பொன்னம்பலத்தை தலைவராகக் கொண்ட அளவெட்டி—மல்லாகம் ப.நோ. கூ.சங்கத்தில் ஊழல்ஒழுங்கீனம்அதிகாரதுஷ்பிரயோகம்ஆகியன தாராளமாக நடப்பதாக மேற்படி சங்க உறுப்பினர்கள் அறுவர் பகிரங்கமாக குற்றம் சுமத்தியுள்ளனர்.

த. சிவலிங்கம், கா. பொன்னுத்துரை, இ. கந்தையா, ச. இராசையா, நா. செல்லத்துரை, சு. பத்மநாதன், ஆகிய மேற்படி சங்க உறுப்பினர்கள் இது சம்பந்தமாக பின்வரும் துண்டுப் பிரசுரமொன்றை வெளியிட்டுள்ளனர்!

பொதுவுடமை பேசும் புல்லுருவிகளின் போலிவேடத்தை கிழித்தெறிவதற்காக அதை அப்படியே இங்கு தருகிறோம்.

''இப்பொழுது அளவெட்டி-மல்லாகம் ப. நோ. கூ. சங்கம் எனப் புனருத்தாரணப் பெயர் கொண்ட எமது ப. நோ. கூ. சங்கம் ''வடபகுதியில் எடுத்துக் காட்டானது எனக் கூட்டுறவுத் துறையில் ஈடுபட்டுள்ள அனைவரும் கணித்துள்ளார்கள். அப்பெயர் மங்காமல் பாதுகாத்து நடந்துகொள்ளுவோம்,'' என்று கூட்டுறவுப் பகுதி உத்தியோகத்தர் அடிக்கடி கூறக் கேட்டிருக்கிறோம்.

திரு. வ. பொன்னம்பலம் இதில் ஈடுபாடு கொண்டபின் ''அவர் தமது அரசியல் கொள்கை முனைப்பை இதில் செலுத்தாமல் தமது இயல்பான ஆற்றல் மிகுதியால் கண்ணும் கருத்துமாக இன்னும் வளர்ந்தோங்கச் செய்து வருகிறார்'' என்றும் அவர்கள் பல தருணங்களில் எடுத்துரைத்தார்கள்.

இக் கிராமத்துடன் தொடர்புடைய வெளியூர் வாசிகளும் இதனை மெச்சினார்கள்.

### புல்லுருவி

அண்ணை, தம்பி, ஐயா என அவர் நடந்து கொண்ட வகையினால் ''அவர் எமது கிராமத்துக்கு வாய்த்த நிழல் மரம்'' என அவருடன் பலவற்றிலும் ஒத்துழைத்த நாமும் பாராட்டினோம். ஆனால் அவரால் இப்பண்டகசாலைக்கு நேர்ந்துள்ளதாக அறியும் சில விஷயங்களையும் நேரில் கண்டும் கேட்டும் மக்கள் அனுபவிக்கும் அதன் தற்போதைய நிலையையும் நோக்கும்பொழுது ''அடடா! நல்லமரத்தில் புல்லுருவி பாய்ந்து அதன் சத்தை உறுஞ்சி வாழ்வது போல வந்துவிட்டதே'' என்றும், அவரது முந்திய சொல், செயல் எல்லாம் பாசாங்கு தானே என்றும் கருதி வெளிப்படுத்தவேண்டியிருக்கிறது.

என்னென்ன நடந்துள்ளன என்பதை மக்கள் அறிந்து சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். கவனியுங்கள்!

### மக்கள் பணத்தில் கும்மாளம்

1. மல்லாகம் கிராம சபையால் 79-ம் ஆண்டில் ஒப்படைக்கப்பட்டு எமது ப. நோ. கூ. சங்கம் ஒப்பந்தம் எடுத்து அளவெட்டி மல்லாகம் சனசமூக நிலையங்களின் ''சமாஜ மண்டபம்'' அளவெட்டி தெற்கில் கட்டப்பட்டதை நாம் அறிவோம். சங்கம் ஒப்பந்தம் செய்து கொண்டது 7575 ரூபாவுக்குத்தான். கட்டிடம் பூர்த்தியாக்கச் சங்கம் விட்ட தொகையோ 17,979 ரூபா 90 சதம், ஒப்பந்தத்திற் காட்டப்பட்ட வேலைகளைச் செய்து சங்கம் நட்டப்பட்டதென எண்ணவேண்டாம். ஒப்பந்தத்துக்கு மேற்பட்ட வேலைகளைத் தலைவர் தமது அதிகாரத்தை உபயோகித்துச் செய்வித்துள்ளார். மிகுதிப் பணம் இன்னும் வழங்கப்படவில்லை; வழங்கப்பட்டாலும் இதில் நடந்த ஒழுங்கீனம் கூட்டுறவுத்துறைக்கே விடப்பட்ட சவால்! சாவுமணி!

ஒப்பந்தம் செய்து கொண்ட தொகைக்கு மேலதிகமாகச் சங்கம் செலவு செய்த பணம் வழக்கமான நடைமுறைக் கொவ்வாத, பொறுப்பற்ற, முறையீனமான வகையில் விடப்பட்டது. அம்முறையீனமான செயலைச் செய்தது யார்? செய்யச் சொன்னவர் யார்? எவருக்கேனும் அத்தகைய அதிகாரம் என்ன வகையில் ஏற்பட்டது.

கிராமசபைக்கும், சமாஜத்துக்கும், ப. நோ. கூ. சங்கத்துக்கும் ஒருவரே தலைவர்; அதனால்தான் மக்கள் பணத்தில் இப்படி முறையீனமாகக் கும்மாளம் அடிக்கும் வாய்ப்பு ஏற்பட்டதோ!

அதுவும் பொது மண்டபம் தானே என்று சிலர் கருதலாம். எமது கிராமத்தில் பொது மண்டபங்கள் இப்படி நிர்மாணிக்கப்படவில்லை. மண்டபம் அவசியமாயின் அமைக்க ஒழுங்கு முறையான வழிகள் பல உள. ''ஆற்றுத் தண்ணீரை அள்ளி அண்ணை குடி, தம்பி குடி என்று செய்வது எவ்வளவு அயோக்கியத்தனம்.

(i) கூட்டுறவு உத்தியோகத்தர் இவ்விஷயத்தில் என்ன செய்தார்களோ! அறியத் தருவாரோ! அல்லது மாற்றம், ஏற்றம் இறக்கம், நீக்கங்கள் கருதிய பதுக்கமா!

(ii) அக்காலத்தில் கட்டிட ஒப்பந்த வேலைகளுக்குப் பொறுப்பாயிருந்து ஒப்பந்தத்துக்கு மேலதிகமாக ஒரு சதமேனும் ஓடவிடாத பொது முகாமையாளர் இக் கட்டிட வேலையில் இப்படிப் பல ஆயிரத்தை ஓடவிட்டதேன்?

.2 சாதாரணமாக அங்கத்தவரின் கடன் தொகை தவணை தப்பிய பொழுது வட்டிக்குமேல் வட்டியும் அதற்கு மேல் குற்றமும் போட்டெழுதிக் கடும் அறிவித்தல் விட்டு நெருக்கும் கிராம வங்கி ஊழியர்கள் முறையான அங்கீகாரம், வட்டி, கட்டும் முறை, பொறுப்பு முதலிய நிபந்தனைகள் அற்ற இந்த ஊதாரித்தனத்தின் போது கண் பொத்தி ஆடினார்களா?

அங்கத்தவர் ஒருவரது கடன் தவணை தப்பினால் அல்லது அவர் ஒருவருக்குப் பிணை நின்று கடன் பெற்றவர் கட்டத் தவறினால் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுத்து அவரை நிர்வாக சபையிலே இடம்பெறுமற் செய்வது வழக்கம். திரு. வ. பொ. பிணைகாரராக நின்ற பணம் தவணை தப்பியது எமக்குத் தெரியாதா? கூட்டுறவுப் பகுதிக்குத் தெரியாதா? திரு. வ. பொ. வுக்குத் தெரியாதா; அவர் தலைவராக இருப்பது முறைகேடான செயல் - கூட்டுறவையே முறியடிக்கும் செயல். ''அவர் இதில் எப்படி இருக்கலாம்.'' ''இவர் அதில் எப்படி இருக்கலாம்'', ''இரண்டிலும் ஒருவர் எப்படி இருக்கலாம்'

திய விழாவொன்றுக்கு உத்தியோக ஆசை காட்டி ஊழியர்களிடம் நிதி பெற்றதை இயக்குனர்சபை அறிய மாட்டாதா? ஒரு உயர்ந்த பதவியைக் கருத்திற் கொண்டு விழாவுக்கு ஒருவரிடம் வெளிச்ச வசதியும், இன்னொருவரிடம் ஒலி பெருக்கி வசதியும் மூன்றாவது ஆளிடம் மேளவசதியும் பெற்றதை மூடிமறைக்க முடியுமா? இடியப்பமவித்துக் கொடுத்துச் சம்பள உயர்வை எதிர்பார்த்திருப்பவர்கள் எத்தனைபேர். பண உதவி செய்து அவரின் கோபத்தைச் சாந்தி செய்தவர்கள் எத்தனைபேர்! இந்த விபரங்களை அறிந்து இந்த நாடே சிரிக்கிறது. இது கைக்கூலி அல்லவா? இது மோசமான தந்திரமான கைக் கூலி.

அந்நாளில் அளவெட்டி ப. நோ. கூ. சங்க நிர்வாக சபையினரிற் சிலர் பட்ட

முடியாது கஷ்டப்படுவதும் எமக்குத் தெரியும். ப. நோ. கூ. சங்கத்தின் கீழ் அத்திட்டம் இயங்குவதாயின் அதன் இயக்குனரே ஊழியரையும் எடுத்திருக்கவேண்டும். அவ்வாறு எடுப்பின் தமது சொந்த நலம் பாதிக்கப்படுமெனக் கருதி முன்னரே தந்திரமாக, மேலதிகாரிகள் ஆட்களைத்தெரிந்துவிட்டார்களென்று கூறிக் கருமம் ஆற்றியுள்ள முறை படு மோசமானது. பிற்போக்குத்தனமானது. இச்செயல்கள், தக்க பிரதிபலனை அளிக்காமற் போகாவென்பது எமது நம்பிக்கை.

### இதுவா சோசலிசம்?

சாதாரண காலத்தில் உடனுக்குடன் கிளை நிலையங்களுக்குக் கிரமமாகப் பகிர்ந்தளிக்கப்பட்ட பங்கீட்டுப் பொருள்கள், இப்பொழுது விடிந்தால் மக்கள் உணவுக்குப் பெட்டிகொண்டு திரிவதே கருமமாக வந்துள்ள இந்த நேரத்தில், எவ்வாறு பங்கிடப்படுகின்றன. மக்கள் அறிந்திருப்பார்கள் தான். அப்பொருள்கள் மொத்த வியாபார நிலையத்தில் வந்து பயணக் களை தீர நித்திரை செய்து 'அத்தமிக்கும் போ

## குற்றவாளிக் கூண்டில் விரைவில் நிறுத்தப்படுவார்!

## சங்கஉறுப்பினர்கள் போர்க்கோலம்!

என்று ''ஊருக்குச் சொல்லும் பல்லி கூழ்ப்பானையில் விழ்ந்து விட்டதோ''.

### சுமைத்தாங்கிச் சங்கம்

3. ப. நோ. கூ. சங்க அமைப்புத் திட்டத்தை உருவாக்கி அமுல் படுத்திய முன்னாள் மந்திரி கனம் பிலிப் இப்பொழுது உயிருடனிருந்தால் தானமைத்த பெயரைவிட ''சுமைதாங்கிச் சங்கம்'' என்ற பெயர் பொருத்தமானது என்று எண்ணுவார். எமது இச்சங்க விஷயத்தில் இப்பொழுது இது ஒரு சுமைதாங்கியாகவே இருக்கிறது. நண்பர் திரு. வ. பொ. தனது வியாபாரத்துக்காகத் தூக்கும் பாரங்களை எல்லாம், இப்பண்டகசாலைச் சுமைதாங்கியில் வைத்துவிட்டு நிற்பார். ஆகவேண்டியதை அது, தான் செய்யவேண்டும். நட்டமோ லாபமோ அனுபவிக்க வேண்டியது இச்சங்கம். அதாவது இச்சங்கத்து மக்கள். ஊழியர்களில் தாம் விரும்பியவருக்கு உத்தியோகம். உத்தியோக உயர்ச்சி எல்லாம் கொடுப்பார். விரும்பாதவர்க்குத் தண்டனை, பதவி இறக்கம் இன்னும் பல வகைக் கஷ்டங்கள் காத்திருக்கும்.

அண்மையில் அளவெட்டிக் கிராமத்தில் அவர் நடாத்

கடனைக் கட்டவில்லை எனக் கேள்விப்பட்டுள்ளோம். ஆனால் மறைமுகமான கைக்கூலி பெற்ற நிகழ்ச்சிகளை இன்றைக்கு முன் என்றும் கேட்டிலோம். மக்கள் தலைவர்களின் மாண்புமிக்க செயலால் சந்தி சிரிக்கிறது. கூட்டுறவு நாற்றமெடுக்கிறது. ஏழு கடல் நீரிற் கழுவினாலும் இந்தக் கறை படிந்த கரத்தைச் சுத்தமாக்க முடியாது!

### இன்னும் கேளுங்கள்!

4. ஒரு ஸ்தாபனத்துக்குத் தகுந்த தேவையான ஊழியர்களை எடுப்பது தான் சாதாரண நடைமுறை வழக்கம். தலைக்குத் தகுந்த தலைப்பாகை தயாரிப்பது போல. ஆனால் இங்கோ தலைப்பாகைகளை வைத்துக்கொண்டு அதற்குத் தகுந்த தலைகளைச் சிருட்டிக்கிற வித்தைகளும் உண்டு. தம் வசம் இருக்கிற ஆட்களுக்கு ஏற்ற தொழில்களைச் சிருட்டித்து அவர்களுக்கு இடம் கொடுத்துச் சங்கத்தை நட்டப்படுத்துவது நாமறிந்த உண்மை.

மல்லாகம் வங்கி திறந்ததும், அபிவிருத்தித் திட்டத்திற்குத் தமக்கு விருப்பமான ஆட்களைச் சேர்த்த பின் அத்திட்டத்தைப் ப. நோ. கூ. சங்கத்தில் திணித்ததும் அதனால் ப. நோ. கூ. சங்கம் பணமுடையால் பொருள் பண்டம் வாங்க

தில் அரிசி வரும்—குத்தி உலையில் இட ஊரடங்கும்' என்ற பாட்டின்படி கிளைப் பண்டகசாலைகளைச் சென்று சேர நாட்பல செல்கிறதே. அதற்கிடையில் இந்தக் கூட்டுறவுப் புண்ணியத்தால் மக்கள் அருவிலைக் கிரையாகி யல்லலா தவிக்கிறார்கள். ஆனால் ஊழியர் தொகையோ இப்பொழுது 'பார்க்குமிடமெங்கணும் நீக்கமற நிறைந்து' காண்கிறோம். கூட்டுறவுப் பகுதி அதிகாரிகளே! நீங்கள் லட்சிய பண்டகசாலை என்று கண்ட இச் சங்கத்தின் கதி (உங்கள் கண்காணிப்பிருந்தும்) இதுவா!

இது கூட்டுறவா! சோசலிசமா! அல்லது 'இரண்டும் கெட்ட லட்சணமா'

'சுருக்கமாகக் கூறினால் அளவெட்டி மல்லாகம் ப. நோ. கூ. சங்கம் இன்று நெறிதவறி நடக்கிறது. ஏனென்று கேட்பாரில்லை என நினைத்துக்கொண்டு சர்வாதிகாரத் தர்பார் நடக்கிறது. முறைகேடுகள் நடைபெற அவற்றை மூடிமறைக்கும் முறையில் நெறியாளர் குழுவுக்கு விளக்கங் கொடுக்கப்படுகிறது. பிழையைச் சரியாகக் காட்டும் கலையிற் கைதேர்ந்தவர் திரு. வ. பொ. மல்லாகத்தில் பெற்றோல் நிலையம் முறையாக எடுக்கப்படு முன் திறப்பு

(7-ம் பக்கம் பார்க்க)

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட். ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா மாவத்தை 194ல். இலக்கத்தில் 1973ம் வருடம் ஜூலை மாதம் 8-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5வது வாரம் கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை)

6வது வாரம் லிடோ (யாழ்நகர்)

ஜெய்சங்கர்,
லக்ஷ்மி, (இருவேடங்களில்)
முத்துராமன்,
சுந்தரராஜன்,
மனோரமா, பாலையா,
எம். ஆர். ஆர். வாசு,
பேபிராணி
மற்றும் பலர் நடித்த



# ராணியார் குழந்தை

25வது வாரம்

கெப்பிட்டல் (கொழும்பு)

வெலிங்டன் (யாழ்நகர்)



சிவாஜிகணேசன், — வாணிஸ்ரீ
நடித்த

# வசந்தமாளிகை

(ஈஸ்ட்மென் கலர்)

வெள்ளி விழா கொண்டாடும் வெற்றிக் காவியம்

---

இன்றே பாருங்கள்

# செல்லமகால்

பெற்றெடுத்த தாய்
தந்தையைத் தவிர
பணத்தால் எதையும்
பெறக் கூடும்!



முத்துராமன்
M. R. R. வாசு
தேங்காய் சீனிவாசன்
ஸ்ரீகாந்த்
மூர்த்தி
டைப்பிஸ்ட் கோபு
லட்சுமி
மனோரமா
ரமாபிரபா

அச்சடிச்ச
அந்த பச்சை
நோட்டுக்கு
அர்ச்சனை செய்வோம்
தமிழாலே.

ஏவி எம்

# காசேதான் கடவுளடா

கதை வசனம் டைரக்ஷன் கோபு

சென்னையில்
100
நாட்கள்!

8வது வாரம் கெயிட்டி

ஜெமினி, நிர்மலா, முத்துராமன், மனோரமா நடித்த

# சுடரும் சூறாவளியும்

---

8வது ஜனத்திரள் வாரம்!

சென்ட்ரல் (கொழும்பு) ராணி (யாழ்நகர்)

தமிழ் நாட்டில் 100 நாட்களுக்குமேல் ஓடியது

முத்துராமன், ஜி. வரலெட்சுமி,

பிரமிளா, ரங்கராவ், ராகவன், ஓ. ஏ. கே. தேவர்,
ரி. ஆர். ராமச்சந்திரன், ஆர். வரலெட்சுமி —நடித்த—



கே. எஸ். கோபாலகிருஷ்ணனின்

# வாழையடி வாழை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org